
மாலை தீப்பொறி
MALAE THEEPORI




2023 ஜுலை 1-15 தொகுதி 21 இதழ் 22 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# மோடி ஆட்சியை வெளியேற்றுவோம்!
# பிரச்சார இயக்கம்!!



பாட்னாவில் நடைபெற்ற எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கருக்கு பாட்னா விமான நிலையத்தில் ஐக்கிய ஜனதா தள கட்சியின் மூத்த தலைவர்களும் அமைச்சர்களுமான திரு.விஜய் சவுத்ரி, திரு. சஞ்சய் ஜா மற்றும் இகக(மாலெ) தோழர்கள் குணால், ராஜாராம் சிங், திரேந்திர ஜா, எம்எல்ஏ மொகபூப் ஆலம், கோபால் ரவிதாஸ் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து பீகார் முதல்வர் திரு.நிதிஷ்குமார் இகக(மாலெ) அலுவலகத்திற்கு வந்து எதிர்க் கட்சிகள் கூட்டம் தொடர்பாக தோழர் திபங்கர் மற்றும் தோழர்களுடன் உரையாடினார்.







2023 ஜூலை 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 22

## உள்ளே

மக்கள் சீற்றமே 4
எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை எனும் சவால் 6
கார்ப்பரேட் கொள்ளை 9
புதிய கல்விக் கொள்கை 12
மோடி-ஜோ பைடன் ஜோடியின் ரகசியம் 17

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**பழ.ஆசைத்தம்பி**
**அ.சந்திரமோகன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

நிர்வாக அலுவலகம்

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741
malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# பாசிசத்தின் பிணந்தின்னும் சாத்திரங்கள்

*குஜராத்தில் நடந்த இஸ்லாமிய இன அழிப்பு தொடர்பாக, பல்வேறு தடயங்களைச் சேகரித்து, அந்த இன அழிப்பினால் பாதிக்கப்பட்ட பில்கிஸ் பானு உள்ளிட்டோருக்காக உச்ச நீதிமன்றம் வரை சென்ற, சமூக செயற்பாட்டாளர் டீஸ்டா செதல்வத்தை, தற்போது சிறைக்குச் செல்ல உத்தரவிட்டது உயர் நீதிமன்றம். பில்கிஸ் பானுவை வன்புணர்வு செய்து, அவரின் 3 வயதுக் குழந்தையைக் கொன்று, ஆயுள் தண்டனை பெற்ற குற்றவாளிகள் 75வது சுதந்திர தினத்தின்போது குஜராத் அரசால் விடுவிக்கப்பட்டார்கள். குஜராத் இன அழிப்பு தொடர்பாக தொடர்ந்து போராடிய, டீஸ்டா செதல்வத் மோடி-அமித்ஷாவுக்கு எதிராக சமர்ப்பித்த ஆவணங்கள் ஆதாரமற்றவை, பொய்யானவை என்றும் குஜராத்தில் நடந்த இஸ்லாமியர் மீதான இன அழிப்பில் மோடி குற்றவாளி இல்லை என்றும் கூறியது உச்சநீதிமன்றம். அதன் விளைவாக டீஸ்டா மீது, பொய் சாட்சிகளை உருவாக்கினார் என்று பொய் வழக்குப் போடப்பட்டு கைது செய்யப்பட்டார். அவருக்கு கடந்த செப்டரில் இடைக்கால பிணை வழங்கப்பட்டது. நிரந்தர பிணை கோரி குஜராத் உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தார் டீஸ்டா. அதைத் தள்ளுபடி செய்து அவரை உடனடியாக சரண்டர் ஆகச் சொன்னார் குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதி நிசார் தேசாய். சரண்டர் ஆவதற்கு 30 நாட்கள் கால அவகாசம் கேட்ட நிலையில், அதையும் தள்ளுபடி செய்து உடனே சரண்டர் ஆகச் சொன்னார் நீதிபதி. அதனைத் தொடர்ந்து உடனடியாக உச்சநீதிமன்றத்தை அணுகினார் டீஸ்டா. உச்ச நீதிமன்றம் அவர் ஏற்கனவே கடந்த 10 மாதங்களாகப் பிணையில் இருக்கும் போது, ஒரு வார கால அவகாசம் கூடக் கொடுக்காமல் எதற்காக, இவ்வளவு அவசரம் காட்டியது குஜராத் உயர்நீதிமன்றம் என்று கேள்வி எழுப்பி, குஜராத் உயர்நீதி மன்றத்தின் உத்தரவைத் தள்ளுபடி செய்துள்ளது உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு. டீஸ்டா குஜராத் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களை தவறாகப் பயன்படுத்தி மோடி அரசின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தினார், காங்கிரஸ் கட்சியின் தலைவர் அகமது பட்டேலிடம் பொய்யான ஆவணங்கள் தயாரிக்க ரூ.30 லட்சம் வாங்கினார் என்றெல்லாம் பிணை மனு மீதான விசாரணையின் போது குறிப்பிட்டுள்ளது குஜராத் உயர்நீதிமன்றம். ஒருவர் மீது காவல்துறை போடும் வழக்கு உண்மையா? பொய்யா? என்பது அவ்வழக்கின் விசாரணைக்குப் பின்னர்தான் தெரியும். அதுவரை எவராக இருந்தாலும் பிணை கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும். ஆங்கிலத்தில்* Bail, not Jail *என்று சொல்வார்கள். அப்படியிருக்க, உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி இடைக்காலப் பிணைக் காலம் முடிந்துவிட்டதால் நிரந்தரப் பிணை கோரிய டீஸ்டாவுக்கு பிணையை மறுத்தது மட்டுமின்றி இயற்கை நீதிக்குப் புறம்பாக தன்னுடைய 100 பக்க உத்தரவின் (பிணைக்கு 100 பக்க உத்தரவு!) மூலம் உடனடியாக சரண்டர் அடையச் சொன்னார் நீதிபதி என்றால், யாருடைய உத்தரவின் பேரில் நீதிமன்ற உத்தரவுகள் எழுதப்படுகின்றன என்கிற சந்தேகம் இயல்பாகவே எழுகின்றது. பாசிசத்தின் பிணந்தின்னும் சாத்திரங்கள்... எல்லாராலும் உச்ச நீதிமன்றம் போக முடியுமா? டீஸ்டாவும் கூட எத்தனை முறைதான் உச்ச நீதிமன்றத்திற்குப் போக முடியும்?* ❑

# மக்களின் சீற்றமே எதிரணி அரசியலுக்கு ஆற்றலாக விளங்கும்; மோடி ஆட்சியை வெளியேற்றும்

**பாலசுந்தரம்**

**தமிழ்நாட்டின் திமுக ஆட்சி, தில்லியின் ஆம் ஆத்மி ஆட்சிகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்துவதையே முழுநேரப் பணியாக செய்து வருகிறார்கள் மோடியும் அமித்ஷாவும். கூட்டாட்சி முறைக்கு குழிபறித்துக் கொண்டிருக்கிறார்கள்.**

ஜூன் 23 பாட்னாவில் கூடிய எதிர்க்கட்சிகள் கூட்டத்தை, "என்னவாகும் எதிர்க்கட்சிகள் வியூகம்" என்று இந்து தமிழ் திசையும், "பயன் தருமா பாட்னா வியூகம்? என்று தினமணியும் "பாட்னா கும்பல் கூட்டணியாகுமா?" என்று துக்ளக்கும் கேள்விகள் எழுப்பி செய்தி வெளியிட்டுள்ளன. இந்த தலைப்புகளிலிருந்தே இந்த செய்திக் கட்டுரைகளின் நோக்கத்தை புரிந்து கொள்ளலாம். ஜூன் 23, பாட்னா எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை "ஆக்கபூர்வமான வரவேற்கத்தக்க" நிகழ்வாக, இந்தியாவின் இடதுசாரி, ஜனநாயக அரசியல் சக்திகள் மதிப்பீடு செய்துள்ள போதிலும் மேற்கூறியவாறு சில பத்திரிகைகள் கேள்விகள் எழுப்புகின்றன.

பாட்னா கூட்டத்தில், திமுக ஒரு முக்கிய தலைமை சக்தியாக அடையாளப்படுத்தப்பட்டது. இந்த பின்னணியில், மோடி ஆதரவு ஏடுகளும் சக்திகளும் இந்த கூட்டம் பற்றி "அரசியல் கட்டுரை" என்ற போர்வையில், அந்த நிகழ்வை பின்னுக்குத் தள்ளும் முயற்சிகளில் இறங்கியுள்ளன. மாநில அளவிலான பாஜக எதிர்ப்பு சக்திகள் மீது அய்யங்களை பின்னுவது, கொள்கையற்ற சக்திகள் என சித்தரிப்பது, ஊழலில் ஒன்றுபட்டவை என்று கூறுவது ஆகிய வழிகளில் மோடி ஆட்சிக்கு எதிரான எதிரணி சாத்தியமற்ற ஒன்று என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகிற முயற்சியாகும். இதன்மூலம், சென்ற மக்களவைத் தேர்தலிலும் அடுத்து வந்த சட்டப் பேரவைத்தேர்தலிலும்பாஜகஅதிமுக கூட்டணியை வலுவாக புறக்கணித்து தோற்கடித்த தமிழக மக்கள் மத்தியில் மோடி எதிர்ப்பு சக்திகள் பற்றிய அவநம்பிக்கை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகும்.

இந்த நோக்கத்துக்கு வலு சேர்க்கும் முயற்சியாக, அதிமுகவும் களத்தில் இறங்கியுள்ளது. பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையோடு மோதிக் கொண்டிருந்த அதிமுக, பாஜகவுடனான பிரச்சனை முடிவுக்கு வந்து விட்டதாக அறிவித்துள்ளது. ஒற்றைக் கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல, முதன்மையான திமுக எதிர்ப்பு கட்சி அதிமுகதான், பாஜக அல்ல என்பது போலவும் அதிமுக தலைமையில் தான் கூட்டணி என்பதையும் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். இதை ஒத்துக் கொள்வது போல முன்னாள் அமைச்சர் ராதாகிருஷ்ணனும் அதிமுக கூட்டணியில் பாஜக உள்ளதாக அறிவித்திருக்கிறார். செந்தில் பாலாஜியை அமைச்சர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று ஆளுநரிடம் மனு கொடுத்தது மட்டுமின்றி, நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, தெருக்களில் ஆர்ப்பாட்டங் களையும் நடத்தியுள்ளது.

ஆளுநரின் தன்னிச்சையான முடிவான செந்தில்பாலாஜி நீக்கத்தை தமிழ்நாட்டின் பெரும்பாலான கட்சிகள் கண்டனம் செய்திருக்க, அஇஅதிமுக, பாஜக மட்டுமே வரவேற்றுள்ளன. பாசிச மோடி ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டுமென இடதுசாரிக் கட்சிகள், எதிர்க்கட்சிகள், முற்போக்கு, ஜனநாயக அமைப்புகள் ஒன்று திரண்டு வரும் வேளையில் அஇஅதிமுக தனக்குதானே குழி தோண்டிருக்கிறது.

ஊழலில் கொடி கட்டி பறந்த 'குட்கா' விஜயபாஸ்கர் சுதந்திரமாக சுற்றித்திரிகிறார். ஆனால், எதிர்க்கட்சிகளின் 20 லட்சம்கோடி ஊழலைப் பற்றி பேசும் அமித்ஷா விஜயபாஸ்கரை விட்டுவைத்திருக்கிறார். தனது அரசியல் எதிராளிகளை ஒழித்துக் கட்டும் திட்டத்துடன்தான் செந்தில் பாலாஜி மீது, எமனின் பா(சி)சக் கயிறை வீசியுள்ளனர் அமித்ஷா வும் அண்ணாமலையும் என்பதை நடந்து வரும் நிகழ்ச்சிகள் தெளிவாக்கி விட்டன. மணிப்பூர் சென்று மோடி முகத்தில் கரி பூசிய ராகுலை தடுத்து நிறுத்தியுள்ள இரட்டை இன்ஜின் ஆட்சிகள் பற்றி உள்துறை அமைச்சர் எதுவும் பேசாமல் அமித்ஷா அமைதி காக்கிறார். அவருக்கு வெற்றி பெற்ற கர்நாடகா காங்கிரஸ் ஆட்சி, தமிழ்நாட்டின் திமுக ஆட்சி, தில்லியின் ஆம் ஆத்மி ஆட்சிகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்துவதையே முழுநேரப் பணியாக செய்து வருகிறார்கள் மோடியும் அமித்ஷாவும். கூட்டாட்சி முறைக்கு குழிபறித்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்களது பாசிச அரசியல் திட்டத்தின் படி மக்களை பிளவு படுத்தும் பொது சிவில் சட்டம் பற்றி மீண்டும் பேசத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையை எதிர் கொள்ளும் வகையில் திமுக தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் பேசி வருகிறார். பாட்னா கூட்டத்தில், பாஜகவை தோற்கடிக்க என்ன உத்திகளை கையாள வேண்டுமென்று பேசி வரவேற்பையும் பெற்றிருக்கிறார். நல்லது. ஆனால், மக்களவை தேர்தலிலும் சட்டப்பேரவை தேர்தலிலும் பாஜக அதிமுக கூட்டணியை படுதோல்வி அடையச் செய்த தமிழக மக்களுக்கு திமுக ஆட்சி செய்ய வேண்டியது ஏராளமாக இருக்கிறது. மக்களின் "உரிமைகளுக்காகவும் வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் விடுதலை, நீதிக்கான வேட்கை மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் நிலையில் களத்தில் மக்களின் போராட்டங்களுடன் நெருக்கமான உயிரோட்ட மான உறவுகளை ஏற்படுத்துவதன் மூலமே எதிர்க்கட்சி ஒற்றுமைக்கு செயல்திட்ட ஆற்றல் அளிக்க" முடியுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) அழுத்தமாக நம்புகிறது.

நிலங்கள் ஒருங்கிணைப்பு சட்டம் விவசாயிகளை அச்சமடையச் செய்திருக்கிறது. பரந்தூர் விமான நிலையம், சென்னை நகர்ப்புர ஏழைகள் அப்புறப்படுத்துதல், மிகத் தாராளமாக செயல்படுத்தப்படும் தனியார் மயமாக்க, தாராளமயமாக்க, உலகமயமாக்க செயல்கள் பெரும் அச்சுறுத்தலாக முன்வந்துள்ளன. 190 நாட்கள் கடந்தும் வேங்கை வயல் குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை; சிறீமதி மரணத்துக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறையவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப் படவில்லை. காவல் கொலைகள் தொடர்கின்றன. தமிழ்நாட்டில் வேறு வடிவில் தேசிய கல்விக் கொள்கை செயல்படுத்தப்படுவதாக கல்விச் சமூகத்தின் மத்தியிலிருந்து கடும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

பாட்னாவில், பாஜகவுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் திரண்டு இருந்தன. அதே வேளை தமிழ்நாட்டிலும் கிராமப்புர, நகர்ப்புர உழைக்கும் மக்கள் மத்தியில் அவிகிதொச, ஏஅய்சிசிடியு, இகக(மாலெ) நடத்தி வரும் மக்கள் சந்திப்பு பரப்புரை இயக்கத்தில் வரவேற்கத்தக்க ஆதரவை தெரிவித்து வருகின்றனர். கார்ப்பரேட் ஆதரவு மோடி ஆட்சியின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக கடும் சீற்றத்தை வெளிப்படுத்துகின்றனர். தேசிய ஊரக வேலைத் திட்டத்தை ஒழித்துக் கட்டும் மோடி அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராகவும் எரிவாயு விலையை 1200 ஆக உயர்த்தி மானியத்தையும் நிறுத்தியுள்ளதற்கெதிராகவும் "அனைவருக்கும் வீடு" என்ற ஏமாற்று திட்டத்தின் மீது குற்றம் சுமத்தியும் தங்கள் கடும் கோபத்தை வெளிப் படுத்தி வருகின்றனர்.

மக்களின் இந்த சீற்றத்தை, மோடி ஆட்சிக் கெதிராக அரசியல் அணிதிரட்டலாக உறுதி செய்ய இகக (மாலெ) உறுதி பூண்டுள்ளது. மக்களின் அரசியல் சீற்றமே எதிரணி அரசியலுக்கு "ஆற்றலாக" விளங்கும்; மோடி ஆட்சியை வெளியேற்றும். ❑

# எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை எனும் சவால்

> **சங்–பாஜக அமைப்பு தனது தேர்தல் வெற்றிகளை ஆர்எஸ்எஸ் உலகக் கண்ணோட்டத்திற்கும் இந்துத்வா அல்லது இந்து மேலாதிக்க பெரும்பான்மைவாத கட்டமைப்பிற்கும் ஏற்ப, இந்தியாவை, இந்திய அரசை, இந்திய சமூகத்தை மறுவடிவமைப்பதற்கான உரிமமாகப் பயன்படுத்துகிறது.**

*இன்றைய இந்தியாவில் இடைவிடாத தாக்குதல் தன்மை மிக்க நிர்வாகத் துறையால் அரசாட்சி செயல்படுத்தப்படுகிறது. இது சட்டம் உருவாக்கும் நம்பிக்கைக்குறிய ஒரு கருவியாக மட்டுமே செயல்படுவதாக நாடாளுமன்றத்தை மாற்றியுள்ளது. நீதித்துறையில் இருந்து வரும் எந்த ஒரு சரிசெய்யும் நடவடிக்கையும் நிர்வாக ஆணைகள் மூலம் அலட்சியத்துடன் தூக்கி எறியப்படுகிறது. ஜனநாயகத்தின் நான்காவது தூண் என நம்பப்படும் ஊடகங்கள், அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலை ஆதரிப்பதும், அதனை ஊதிப் பெரிதாக்குவதும், வல்லமைமிக்க தலைவரின் விளம்பர ஊடகமாக செயல்படுவதுமே அவற்றின் முக்கியப் பணி என ஏற்றுக்கொண்ட, தன்விருப்பமுள்ள கூட்டாளியாக, திறன்மிகு வகையில் மறுவடிவமைக்கப்பட்டு விட்டன. கடந்த எழுபதாண்டுகளாக இந்தியாவில் அரசமைப்புச் சட்ட ஜனநாயகம் உயிர்த்திருப்பதற்கு மிகமுக்கியமான அம்சமாக விளங்கும், அதிகாரங்களைப் பிரித்து வைத்திருப்பதும், பல்வகை நிறுவனங்கள் மூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளும் இன்று மிகமோசமாக சிதைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.*

*543 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அவையில் ஆளும் கட்சியின் உறுப்பினர்களுக்கும் முன்னணி எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான இடைவெளி 250 என்னும் மிக அதிக அளவாக உள்ளதால், தேர்தல் அரங்கில் ஏற்பட்டுள்ள பெரும் ஏற்றத்தாழ்வு, இந்தத் தாக்குதல் தன்மை மிக்க அதிகார மையமயமாக்கலை எளிதாக்கியுள்ளது. இருப்பினும், பல தேர்தல்களில் பாஜக தோற்கடிக்கப்பட்டதால் அல்லது வெற்றி பெறுவதில் இருந்து தடுக்கப்பட்டதால் மாநிலங்களில் உள்ள நிலைமை சரிசமமாகவே இருக்கிறது. ஆனாலும் மோடி ஆட்சி மீண்டும் மீண்டும் பாஜக அல்லாத மாநில அரசாங்கங்களை கவிழ்த்து வருகிறது. மேலும் கட்சித் தாவல்களை உருவாக்குவதன் மூலம் அவ்வாறு மாநில அரசாங்கங்களை கவிழ்க்க முடியாத மாநிலங்களில் மத்திய அரசின் நிறுவனங்கள், ஆளுநர் அல்லது துணைநிலை ஆளுநர் அலுவலகங்கள் மூலம் நெருக்கடி கொடுப்பதன் மூலம் இடைவிடாத பழிவாங்கும் போரை நடத்தி வருகிறது. 50 ஆண்டுகள் இந்தியாவை ஆட்சி செய்யவும், பல கட்சி ஜனநாயகத்தை ஒற்றைக் கட்சி ஆட்சி முறைக்கு உட்படுத்தவும் எண்ணும் ஆளும் பாஜகவின் கனவிலிருந்து எழும், முழு அளவிலான தேர்தல் எதேச்சதிகாரத்தில் இருந்து இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமானால், ஒன்றுபட்ட, உறுதியான அரசியல் எதிர்ப்பு மிக மிக அவசியமாகும்.*

*இந்தியாவில் 1977 வரை காங்கிரஸ் கட்சி மத்திய அரசை இடையூறற்ற வகையில் ஆட்சி செய்து கொண்டிருந்தது. இந்த முப்பதாண்டுகள் நீடித்த காங்கிரஸ் ஆட்சியின் கடைசி இரண்டு*

ஆண்டுகள், எதேச்சதிகார ஆட்சியின் ஆபத்தான பிடிக்குள் அரசமைப்புச்சட்ட ஜனநாயகம் சிக்கிக்கொண்ட, உள்நாட்டு அவசரநிலையால் குறிக்கப்பட்டது. 1977 தேர்தல்கள் அந்த அவசர நிலையை ஜனதா கட்சி ஆட்சியின் மூலம் முடிவுக்கு கொண்டு வந்தன. வலது, வலதுமைய கட்சிகளின் குறுகிய கால இணைப்பால் உருவாக்கப்பட்ட ஜனதா கட்சி மத்தியில் காங்கிரசுக்கு பதிலாக ஆட்சியமைத்தது. 1977க்குப் பிந்தைய காலகட்டம் அடிக்கடி மாற்றப்பட்ட அரசாங்கங்கள், மேலாதிக்கமிக்க ஒற்றைக் கட்சி ஆட்சிக்கு பதிலாக ஒரு கூட்டணி காலகட்டத்தின் எழுச்சியைக் கண்டது. ஆர்எஸ்எஸ் தனது செல்வாக்கையும் நிறுவன வலையமைப்பையும் விரிவுபடுத்த இந்த பரிணாமத்தை முறையாகப் பயன்படுத்திக் கொண்டது. 1977ல் ஜனசங்கத்தை கலைத்து விட்டு ஜனதா கட்சியாக மாற்றியது முதல் 1980களில் பாரதிய ஜனதா கட்சியாக தன்னை புதுப்பித்துக் கொண்டது வரையிலும், 1990களின் மத்தியில் அதன் முக்கிய நிகழ்ச்சி நிரலில் இருந்த சில சர்ச்சைக்குரிய விஷயங்களைக் கிடப்பில் போட்டது முதல் தொடர்ச்சியாக இரண்டு மக்களவைத் தேர்தல்களில் வெற்றிகளைப் பெற்ற பிறகு அதன் முழு இந்து ராஷ்டிரத் திட்டத்தையும் வெளிப்படையாக செயல்படுத்து வது வரையிலும், சங்பாஜக அமைப்பு, இந்தியாவின் சமூக கொந்தளிப்புகளையும் நாடாளுமன்ற ஜனநாய கத்தில் உள்ள அரசியல் வாய்ப்புகளையும் பயன்படுத்தி அதிகபட்ச வலிமையைப் பெற்றுக் கொண்டது.

எவ்வாறாயினும், பாஜகவின் தனிப்பெரும் அரசியல் ஆதிக்கம் ஒரு எதேச்சதிகார ஆட்சியின் கைகளில் கட்டுப்பாடற்ற அதிகாரத்தை குவிப்பதை மட்டுமே செய்யவில்லை. சங்-பாஜக அமைப்பு தனது தேர்தல் வெற்றிகளை ஆர்எஸ்எஸ் உலகக் கண்ணோட்டத்திற்கும் இந்துத்வா அல்லது இந்து மேலாதிக்க பெரும்பான்மைவாத கட்டமைப்பிற்கும் ஏற்ப, இந்தியாவை, இந்திய அரசை, இந்திய சமூகத்தை மறுவடிவமைப்பதற்கான உரிமமாகப் பயன்படுத் துகிறது. இன்றைக்கு மோடி அரசாங்கம் எந்தளவுக்கு அதிகாரத்தை மையப்படுத்தி யுள்ளதோ அந்தளவுக்கு வன்முறையை பரவலாக்கியதற்கும் வெறுப்புக் குற்றங்களை இயல்பாக்கியதற்கும் குறிக்கப்படுகிறது. கட்டுப்பாடற்ற கார்ப்பரேட் கொள்ளை, தங்கு தடையற்ற அரசு ஒடுக்குமுறை, தன்னிச்சையாக செயல்படும் கண்காணிப்புக் குழுக்களின் திட்டமிடப்பட்ட வன்முறை ஆகியவை அச்சத்தின் குடியரசாக இந்தியாவை மாற்றி யுள்ளன. அங்கு குடிமக்கள், ஒரு கண்காணிப்பு அரசில் உள்ள கட்டுப்படுத்தப்பட்ட சமூகத்தின் அச்சமுற்ற குடிமக்களாக மாற்றப்படுகிறார்கள். அரசியல் எதிரிகள் தொடர்ச்சியாக பழிவாங்கப் படுகிறார்கள்; கருத்தியல் எதிர்ப்பாளர்கள் இடைவிடாத துன்புறுத்தலுக்கும் வேட்டை யாடுதலுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்; தலித்துகள், பழங்குடியினர், பெண்கள், ஒடுக்கப்பட்ட ஏழைகள் அதிகரித்த கொடுமை களை எதிர்கொள்கின்றனர்; சிறுபான்மையினர், குறிப்பாக முஸ்லீம்கள், வெறுப்புப் பரப்புரை, விலக்கி வைக்கப்படுதல், அப்பட்டமான இனப்படுகொலை வன்முறை ஆகியவற்றுக்கு இலக்காகியுள்ளனர். மக்கள் மீது எந்த அக்கறையுமற்ற, அதிகாரத்தைப் பெறுவதற்கான இழிந்த வேட்கையின் வழிமுறையாக, அரசியல் மாறும்போது, அனைத்தையும் விழுங்கிக் கொள்ளும் அராஜக நிலைக்கு நாடு தள்ளப்படும். இன்று மணிப்பூருக்கு நடப்பது நாளை ஒட்டுமொத்த இந்தியாவுக்கே நடக்கும் என்பதற்கான ஒரு எச்சரிக்கையாகும்.

தெளிவாகவே, இந்தியாவுக்கு உடனடியாக ஒரு மாற்று வழித் தேவையாகும். இந்தியா என்பது அரசமைப்புச்சட்டத்தின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட இறையாண்மைமிக்க சோசலிச மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசு என்னும் பார்வை, அனைத்து குடிமக்களுக்கும் உரிமைகள், சுதந்திரம் வழங்கும் சாசனத்துடன் பில்லியன் மக்களுக்கும் அதிகமான மக்களுக்காக செயல்படும் ஜனநாயகத்தின் விதிமுறைகள், வேற்றுமையில் ஒற்றுமையும் கூட்டுக் கலாச் சாரமும் என்னும் சமூகக் கட்டமைப்பு, மாநிலங்களின் ஒன்றியமாகவே இந்தியா நிர்வகிக்கப்படும் என்ற கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையிலான கட்டமைப்பு ஆகிய எதையும் இனி சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திரம் அடைந்ததில் இருந்து நாம் அறிந்தும் அனுபவித்தும் வரும் நவீன இந்தியாவின் அரசமைப்புச் சட்ட பயணத்தை, இந்தியா என்பது ஒரு பாசிச இந்து மேலாதிக்க அரசு என்ற மாற்றுப் பாதை தடம் புரள செய்யும் என்ற அச்சுறுத்தல் எழுந்துள்ளது.

எனவே, இந்திய மக்களுக்கு ஒரு புதிய சமூக உடன்படிக்கை, ஒரு புதிய ஒப்பந்தம்

தேவைப்படுகிறது. மோடி ஆட்சியைத் தேர்தலில் தோற்கடிப்பதன் மூலம் மட்டுமே இதனை நிச்சயமாக அடைய முடியாது. தற்போது நடைமுறையில் உள்ள பல கொள்கைகளையும் அரசாட்சி செய்யும் முறைகளையும் இந்தியா மறுபரிசீலனை செய்து மறுசீரமைக்க வேண்டும். அவற்றில் சில ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் உட்பட்ட மோடி ஆட்சிக்கு முந்தைய ஆட்சிகள் ஏற்படுத்தி உள்ளவையாகும். கார்ப்பரேட் சார்பு பொருளாதார சலுகைகளும் தனியார் மயமாக்கமும், ஆதாரும் ஜிஎஸ்டியும் அல்லது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமும் போலி மோதல் கொலைகளும் போன்ற எதுவாக இருந்தாலும், மோடி காலத்தின் பல பேரழிவுகள், பெரும் தாக்குதல்களின் தோற்றத்தை பாஜக அல்லாத ஆட்சிகளிலேயே காணலாம்.

பெரிதும் எதிர்பார்க்கப்படும் எதிர்க் கட்சிகளின் இந்த முதல் கூட்டத்தில் நீண்ட கோரிக்கைப் பட்டியலை முன்வைப்பது நிச்சய மாக அப்பாவித்தனமாகவே இருக்க முடியும். இப்படி ஒரு சந்திப்பு நடப்பதையே ஒரு சாதகமான தொடக்கமாக பார்க்க வேண்டும். தற்செயலாக, பிப்ரவரி 18 அன்று இகக (மாலெ) 11வது மாநாட்டையொட்டி பாட்னாவில் நடைபெற்ற 'ஜனநாயகத்தைக் காப்பாற்றுவோம், இந்தியாவைக் காப்பாற்றுவோம்' என்ற கருத்தரங்கம், நான்கு மாதங்களுக்கு முன்பே இத்தகைய கூட்டத்தின் அவசியத்தை எடுத்து ரைத்தது. பாஜக அல்லாத பரந்த அரசியல் கட்சிகளின் அடிப்படையிலான இந்தக் கூட்டம், நரேந்திர மோடியின் தலைமையிலான அரசாங்கத்தின் இரண்டு அடுத்தடுத்த ஆட்சிக் காலங்கள் ஏற்படுத்திய பேரழிவில் இருந்து இந்தியாவை மீட்பதற்கான சாத்தியமான, நம்பகமான மாற்றணி ஒன்று மேலெழுவதற்கான முதல் படியாக இருக்க வேண்டும். காங்கிரசும் அதன் பல்வேறு பிரிவுகளும், சோசலிச நீரோட்டத்தையும் சமூக நீதி முகாமையும் சேர்ந்த கட்சிகளான பழைய லோக் தளம், ஜனதா தளம் ஆகியவற்றின் பிரிவுகளும், கம்யூனிஸ்ட் கட்சிகளும், பிராந்தியக் கட்சிகளும், அங்கீகரிக் கப்பட்ட தேசியக் கட்சியின் அந்தஸ்தைப் பெறுவதற்கான முயற்சியில் உள்ள சமீபத்திய உருவாக்கமான ஆம் ஆத்மி கட்சியும் உள்ளிட்ட இந்தியாவின் பலவண்ண எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையூட்டும் கலவையை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தலைவர்கள் இந்த முதல் கூட்டத்தில் பங்கு பெறுகின்றனர். அத்தகைய கூட்டணி சாத்தியமானதென நிரூபணமாகுமா? இதேபோன்ற கூட்டணிகள் தற்போது தமிழ்நாடு, பீகார் போன்ற மாநிலங்களில் செயல்படுகின்றன. மேலும் 2004க்கும் 2014க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி இரண்டு முழு பதவிக் காலங்களை அனுபவித்ததையும் நாம் மறந்துவிடக் கூடாது. எனவே, மோடி அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் இந்த இக் கட்டான சூழ்நிலையிலிருந்து நாட்டை காப்பாற்றுவதற்கு ஒரு நிலையான கூட்டணியை உருவாக்க முடியாது என்பதற்கு எந்த காரணமும் இல்லை.

தற்போதைய நிலவரப்படி, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை நடவடிக்கையில் பங்கேற்பவைகளில் சில முற்றிலும் வேறுபட்ட பிராந்திய கட்சிகள் ஆகும். அதேவேளையில், ஒருவருக்கு ஒருவர் போட்டியாளராக சிலர் ஒரே பகுதிக்குள்ளும் செயல்படுகின்றனர். போட்டி போடுவதிலிருந்து ஒத்துழைப்பிற்கு மாறுவதற்கு நீங்கள் விரும்பினால், அதை ஒத்துழைப்பிற்குள் போட்டியிடுவது என்றும் அழைக்கலாம் நிச்சயமாக சில முன்முயற்சிகளும் சாதகமான சூழலும், வளரவும் பரிணமிக்கவும் வேண்டிய கட்டமைப்பும் தேவைப்படும். ஒரு நியாயமான, பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொகுதிப் பங்கீட்டைச் செயல்படுத்துவதிலும் பல்வேறு சிரமங்கள் இருக்கும். ஆனால், இந்தியா தற்போது எதிர்கொள்ளும் முன்னெப்போதும் இல்லாத, அசாதாரணமான அரசியல் சூழலால் இந்த ஒற்றுமை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பல வழிகளில் இது இந்தியாவின் இரண்டாவது விடுதலை போராட்டமாகும். 1947க்கு முந்தைய கால விடுதலைப் போராட்டத்தின் போது, அரசியல் சுதந்திரத்திற்கும் சமூக மாற்றத்திற்குமாக நடைபெற்ற இயக்கம், ஒன்றிணைந்தும் ஒத்துழைப்புடனும் செயல்பட்ட பல நீரோட்டங்களையும் வண்ணங்களையும் கொண்டிருந்தது. பல்வகை நிகழ்வுகளையும் கொண்டிருந்த இந்த வரலாற்றில் இருந்து உருவான அரசியல் சாசனமும், அம்பேத்கரின் தொலைநோக்கு பார்வையும், ஜனநாயகம் செயல்படக் கூடியதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற இந்தியா கடக்க வேண்டிய முரண்கள், மோதல்கள் குறித்து நம்மை முன்பே எச்சரித்திருந்தன. இன்று நவீன இந்தியாவின் அரசமைப்புச்சட்ட பார்வையும் அடித்தளமும் மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கும்

போது, பகத்சிங், அம்பேத்கர், பெரியார், காந்தி, நேரு ஆகியோரின் மரபுகள் பல ஆண்டுகால பாசிசத் தாக்குதலுக்குப் பிறகு ஜனநாயகத்தை மீட்டெடுக்கவும், புத்துயிர்ப்பு அளிக்கவும் ஒன்றிணைய வேண்டும்.

விடுதலைப் போராட்ட இயக்கத்தின் செழுமையான மரபும் எழுபதாண்டு கால நாடாளுமன்ற ஜனநாயகமும், 'இந்திய மக்களாகிய நமக்கு' கணிசமான அரசியல் அனுபவத்தை அளித்துள்ளது. இந்த எழுபதாண்டுகள் பல்வகை புதிய கட்சிகளை உருவாக்கியுள்ளன. அவற்றில் பல சமூக, பிராந்திய, இன அடையாளங்களில் வேரூன்றியுள்ளன. இந்தக் கட்சிகளை தனிமைப் படுத்தப்பட்ட, வேறுபட்ட அமைப்புகளாகப் பார்ப்பதற்குப் பதிலாக, அனைத்துக் கட்சிகளுக்கும் உரிய இடத்தை வழங்கும் கூட்டாட்சி ஜனநாயக வெளியை நாம் முன்னிலைப்படுத்த வேண்டும். அசாதாரண சூழ்நிலைகள் அசாதாரணமான எதிர்வினைகளைக் கோருகின்றன. அடுத்த மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக, ஒன்றிணைந்து செயல்படுவதற்கும் அதன் மிகச் சிறந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுமான எதிர்ப்பு இயக்கம் உண்மையிலேயே இந்தியாவுக்கு தேவைப்படுகிறது. அவர்களின் உரிமைகளுக்காகவும், பாதுகாப்பான வாழ்வாதாரத்திற்காகவும், விடுதலைக்காகவும், நீதிக்காகவுமான வேட்கை மக்கள் மத்தியில் வெளிப்படையாக அதிகரித்து வருகிறது. களத்தில் மக்களின் போராட்டங்களுடனும் விருப்பங்களுடனும் நெருக்கமான உயிரோட்டமான உறவுகளை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்க்கட்சி ஒற்றுமைக்கான செயல்முறைக்கு ஆற்றல் அளிக்கப்பட வேண்டும். ❑

எம்எல் அப்டேட் தலையங்கம் 20–26 ஜூன் 2023

**தமிழாக்கம் – செந்தில்**

# கார்ப்பரேட் கொள்ளை, மதவெறி நஞ்சு என்ற இரட்டை நோய்களிலிருந்து இந்தியப் பொருளாதாரத்தை மீட்டெடுப்போம்

***2014***ல் இருந்தே பாஜகவின் தேர்தல் பேரணிகளில் 'இரட்டை எஞ்சின் அரசாங்கம்' என்ற கூற்றை அடிக்கடி கேட்கிறோம். இந்தக் கூற்று, பாஜக மத்திய ஆட்சி அதிகாரத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் மாநிலங்களிலும் தனக்கே வாக்களிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப் பயன்படுத்தப்படும் மோடிஷா ஆகியோரின் மிகவும் விரும்பத்தக்க உருவகமாகும். தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி ஆனந்த நாகேஸ்வரன் இப்போது பொருளாதாரத்தை விவரிக்க விமான போக்குவரத்தின் சொல் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்தியப் பொருளாதாரம் இப்போது ('ஆட்டோபைலட் மோட்') 'தானியங்கு செயல்முறை'யில் உள்ளது என்றும் 2030 வரை 6.57% என்ற அளவில் சீராக அதிகரிக்கும் என்றும் அவர் கூறுகிறார். மோடி அரசாங்கத்தின் ஒன்பது ஆண்டுகளில், நீண்டகால பொருளாதார தேக்கநிலையையும் வீழ்ச்சியையும் நாம் கண்டிருக்கிறோம். பணமதிப்பிழப்பு, சரக்கு சேவை வரி, பொது முடக்கம் ஆகிய முப்பெரும் தாக்குதல்களும் தனியார்மயமாக்கல், ஆட்குறைப்பு, தொழிலாளர்களை தற்காலிகப் பணியாளர்களாக மாற்றுதல் ஆகிய கொள்கைகளும் வேலையின்மையையும் விலைவாசி உயர்வையும் வரலாறு காணாத அளவிற்கு கொண்டு சென்றுள்ளன. ஆனால் இப்போது முக்கியமான மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக, தானியங்கு செயல்முறையில் பொருளாதாரம் பாதுகாப்பாக முன்னேறிச் செல்கிறது; அரசாங்கம் எதுவும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று நமக்குச் சொல்லப்படுகிறது.

**அதானி குழுமத்தின் எழுச்சியும் நெருக்கடியும், தனியார் பெரு நிறுவனங்களின் ஆதாயங்களுக்காக பொதுமக்களின் பணம் தவறாகப் பயன்படுத்தப் படுவதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.**

தன்னைத் தானே பாராட்டிக் கொள்ளும் இந்தப் பரப்புரைகள் பொதுவாக இரண்டு ஆதாரங்களின் அடிப்படையைக் கொண்டுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) ஒரு மிதமான வளர்ச்சியும் சரக்கு சேவை வரி (ஜிஎஸ்டி) வசூலில் அதிகரிப்பும் என்ற தற்காலிக புள்ளிவிவரங்கள் தான் அவையாகும். இந்தப் புள்ளிவிவரங்கள் இன்னும் தற்காலிகமான வையே. ஆனால் அரசாங்கமும் அதனை உற்சாகப்படுத்தும் ஊடகங்களும் ஏற்கனவே மேளம் கொட்டத் தொடங்கி விட்டன. நாம் நினைவில் கொள்ள வேண்டிய முதல் விஷயம் என்னவென்றால், இப்போது கூறப்படும் 6.57% வளர்ச்சியானது, பெருந்தொற்று காலத்தின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட மாபெரும் வீழ்ச்சியை தொடர்ந்து வருகிறது. அதாவது பெருந்தொற்று காலத்தின் சரிவில் இருந்து இந்தியா மீண்டு வருகிறது என்றே இதற்குப் பொருளாகும். இரண்டாவதாக, தற்போதைய வளர்ச்சி இன்னும் நிலையற்ற தாகவும் மிகவும் சீரற்றதாகவும் உள்ளது. துறைகளின் அடிப்படையில் பார்த்தால், இந்த வளர்ச்சியானது சேவை, கட்டுமானம், சுற்றுலா ஆகிய மூன்று துறைகளில் மட்டுமே குவிந் துள்ளது. வருமானத்தின் அடிப்படையில் பார்த்தால், மேலேயுள்ள அதிக வருமானம் பெறும் 20 சதவீதத்தினரே இந்த வளர்ச்சியை உந்தித் தள்ளுகின்றனர். அதே நேரத்தில் கீழேயுள்ள குறைவான வருமானம் பெறும் 80% மக்கள் மேலும் மேலும் வறுமையில் மூழ்கி வருகின்றனர். இந்த ஏற்றத்தாழ்வான பொருளா தார மீட்சி ஆங்கில மொழியிலுள்ள கே என்ற எழுத்தின் வடிவத்தை ஒத்திருக்கிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெளியிடப் பட்ட 'பெரும் பணக்காரர்களின் வாழ்வு' (ஒருவேளை பெரும் பணக்காரர்களின் திருவிழா எனப் பெயரிடப்பட்டிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்) எனத் தலைப்பிடப் பட்ட ஆக்ஸ்பாம் அறிக்கை, இந்த ஏற்றத்தாழ் வான வளர்ச்சியின் அதிர்ச்சியூட்டும் காட்சியை நமக்குக் காட்டியது. பில்லியனர்களின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டு 102 ஆக இருந்தது; 2022ல் 166 ஆக சட்டென்று அதிகரித்தது. இந்தியாவில் 2012க்கும் 2021க்கும் இடைப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட செல்வத்தில் நாற்பது சதவீதம், மக்கள்தொகையில் ஒரு சதவீதம் மட்டுமே உள்ளவர்களுக்கு சென்று சேர்ந்தது. வெறும் மூன்று சதவீத அளவு செல்வம் மட்டுமே கீழ்மட்டத்தில் உள்ள 50 சதவீதத்தினருக்குச் சென்றது. தனியார் நுகர்வு, குறிப்பாக அத்தியா வசிய பொருட்கள், சேவைகளை பரந்த மக்கள் நுகர்வது, வருமானத்தின் வீழ்ச்சி, வாங்கும் சக்தியில் ஏற்பட்ட அரிப்பு ஆகிய வற்றின் காரணமாக அதிகரிக்கத் தவறிவிட்டது. இரு சக்கர வாகனங்கள், குறைந்த விலை பயணிகள் கார்களின் விற்பனை குறைந்துள்ள, அதே நேரத் தில், விலையுயர்ந்த கார்கள், ஆடம்பர நுகர்வுப் பொருட்கள் அதிகமாக விற்பனையாகின்றன.

பெரும் செல்வந்தர்களுக்கு ஆதரவான வரிவிதிப்புகளாலும் வங்கிச் செயல்பாடுகளாலும் இந்த அதீத ஏற்றத்தாழ்வான செல்வ விநியோக முறை மறுஉறுதி செய்யப்படுகிறது. இந்தியாவில் செல்வம் அல்லது பரம்பரை சொத்துக்கான வரி இல்லை. அதே நேரத்தில் நடப்பிலுள்ள கார்ப்பரேட் வரி விகிதம் குறைந்து வருகிறது. பெருமளவிற்கு வங்கிச் செயல்பாடுகள் பெரும்பணக்காரர்களின் நலன்களுக்கு ஏற்ற தாகவே உள்ளது. கோடிகளில் வாங்கிய கடனை திரும்பக் கட்டாமல் இருப்பது, கடன் தள்ளுபடிகள், திவாலான நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதி ஆதரவு என அனைத்தும் பெரும் பணக்காரர்களின் கைகளில் செல்வம் பெருகுவதற்கான ஒரு கருவியாக வங்கிச் செயல்பாடுகளை மாற்றியுள்ளது. அதானி குழுமத்தின் எழுச்சியும் நெருக்கடியும், தனியார் பெரு நிறுவனங்களின் ஆதாயங்களுக்காக பொதுமக்களின் பணம் தவறாகப் பயன்படுத்தப் படுவதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதானி குழுமத்தின் துரிதமான, பிரமிக்கத்தக்க எழுச்சியானது அடிப்படையில் இந்தியாவின் உள்கட்டமைப்பை மக்கள் கைகளில் இருந்து அதானியின் கட்டுப்பாட்டிற்கு மாற்றியதைக் குறிக்கிறது. தற்போது, ஹிண்டன்பர்க் அறிக்கை அதானி குழுமத்தின் பிரமிக்கத்தக்க வீழ்ச்சியைத் தூண்டிவிட்ட பிறகு, அதானி சாம்ராஜ்யத்தைக் காப்பாற்ற ஆயுள் காப்பீட்டு கழகம், இந்திய அரசு வங்கி போன்ற பொதுத்துறை நிதி நிறுவனங்கள் தியாகம் செய்யப்பட்டதை மீண்டும் ஒருமுறை நாம் பார்க்கிறோம்.

இந்தியா பெரும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் வேளையில், மோடி அரசாங்கம் மோசமான பொருளாதார நெருக்கடி என்ற யதார்த்தத்தை மறுப்பது மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும் வகுப்புவாத துருவச் சேர்க்கையை கூர்மைப்படுத்துவதன் மூலமும் சிறுபான்மையினரை பலிகடா ஆக்குவதன்

மூலமும் அதை மறைக்க முயல்கிறது. இந்து ராஷ்டிரா குறித்த பரப்புரையைத் தொடங்கி வைக்க ஒரு அதிசய பாபா பீகாருக்கு அழைத்து வரப்பட்டார். மகாராஷ்டிராவில், திப்பு சுல்தான், அவுரங்கசீப் போன்ற வரலாற்று நாயகர்களை இழிவுபடுத்துவதன் மூலம் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் திட்டமிட்டு நடத்தப்படுகின்றன. தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவாரை ஔரங்கசீப்பின் மறுபிறவி எனக் குறிப்பிட்டு களங்கம் ஏற்படுத்த முயல்கிறார்கள். உத்தரகாண்டில் ஜோஷிமத் பிரச்சினை, அரசு வேலைக்கான தேர்வில் மோசடி, இளம் பெண் அங்கிதா பண்டாரியின் கொலை ஆகியவற்றால் வெகுமக்களின் கோபத்தை பாஜக அரசாங்கம் எதிர்கொள்ளும் வேளையில், 'லவ் ஜிஹாத்', 'லேண்ட் ஜிஹாத்' (காதல் விடுதலை, நில விடுதலை) எனப் பயமுறுத்தி, இந்த 'ஜிஹாதி'களிடமிருந்து 'தேவ பூமி'யைக் காப்பாற்ற அழைப்பு விடுப்பதன் மூலம், முஸ்லிம்களின் கடைகளை மூடுவதற்கும் முஸ்லிம்களை வெளியேற்றுவதற்கும் வன்முறை மிகுந்த இயக்கத்தை தொடங்குவதன் மூலம், சங்கப் படையினர் முழு அளவிலான இன அழிப்புக்கு வழிவகை செய்கிறார்கள். மத நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் சீரழிப்பதன் மூலம், இந்த நச்சு அரசியல் இந்தியாவின் பொருளாதார நெருக்கடியை ஆழமாக்கி, ஒரு அரசமைப்புச் சட்டக் குடியரசு என்ற அளவில், இந்தியாவின் தேசிய ஒற்றுமைக்கும் நிலைத்தன்மைக்கும் ஆபத்தை ஏற்படுத்துகிறது. இப்படியான செயல் திட்டத்தை மே மாதம் நடைபெற்ற தேர்தலில் கர்நாடகா தோற்கடித்தது. இந்தப் பாசிச நிகழ்ச்சி நிரலை முறியடிக்க முழு இந்தியாவும் நிச்சயமாக இப்போது தயாராக வேண்டும்.

எம்எல் அப்டேட் தலையங்கம் 13–19 ஜூன் 2023

**தமிழாக்கம் – செந்தில்**

## பாரதிய ஏதேச்சதிகார கட்சியாக உருமாறிவிட்ட பாரதிய சனதா கட்சி

### பொது குடிமைச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒற்றைத் தன்மையைப் புகுத்தி பன்முகத்தன்மையை அழிக்கும் சதியாகும் இது

பாட்னாவில் நடக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டம் என்பது சரியான திசையில் முன்னெடுக் கப்பட்டுள்ள வரவேற்கத்தக்க ஒன்றாகும் என இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் கூறினார். இந்த பிப்ரவரி மாதம் பாட்னாவில் நடைபெற்ற இகக(மாலெ)யின் 11வது கட்சிக் காங்கிரஸ் எதிர்க்கட்சிகளின் பரந்த ஒற்றுமைக்கான யோசனைக்கு விதைபோட்டது. அதன் அதிர்வையும் விரிவாக்கத்தையும் இந்தக் கூட்டத்தில் காணமுடிகிறது. எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை மற்றும் நிகழ்ச்சிநிரலுக்காக தொடர்ந்து கொண்டிருக்கும் முயற்சிகளில் எதிர்க்கட்சிகளின் இக் கூட்டம் ஒரு அடுத்த கட்ட நகர்வாகும். இக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிற அனைத்து கட்சிகளும் இந்த நாடு எதிர்கொண்டிருக்கும் அச்சுறுத்தலின் தீவிரத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம். பாரதிய சனதா கட்சி, பாரதிய ஏதேச்சதிகார கட்சியாக உருமாறியிருக்கின்றது. அது அரசிலமைப்பு நிறுவனங்களையும் அனைவருடைய வாழ்வையும் கட்டுப்படுத்துகிறது. ஜனநாயகம்- அரசியலமைப்பு- கூட்டாட்சி எல்லாம் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. இந்த முக்கியமான தருணத்தில் நடக்கும் இக் கூட்டம் மிகவும் பொருத்தப் பாடுடையதாகும்.

மேலும் அவர், மோடியின் ஏதேச்சதிகாரத்தை ஒரு சிறந்த மக்கள் இயக்கத்தால் மட்டுமே தோற் கடிக்க முடியும் என்றார். வரக்கூடிய தேர்தல்களை ஒரு பரந்த வெகு மக்கள் இயக்கமாக நாம் மாற்ற வேண்டியதிருக்கிறது. மோடியே வெளியேறு பிரச்சார மானது ஒரு வெகுமக்கள் இயக்கத்தின் வடிவத்தைப் பெற வேண்டியதிருக்கும்.

இகக(மாலெ) பீகார் மாநிலச் செயலாளர் குணால், சமூக மற்றும் சட்ட சீர்திருத்தங்களுடைய நிகழ்ச்சிநிரல் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டு, வாக்குகளுக்கான தேர்தல் கணக்கீடுகளில் இருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும் என்றார். வாக்குக ளுக்காக பாஜக இந்தப் பிரச்சனையை மீண்டும் கையில் எடுத்துள்ளது.

இந்தியா பன்முகப்பட்ட கலாச்சாரங்களை, வாழ்கை முறைகளைக் கொண்டது. பொது குடிமைச் சட்டம் என்ற பெயரில் பன்முகத்தன்மையைக் காலி செய்து ஒற்றைத் தன்மைத் திணிக்கும் முயற்சியானது முன்னேற்றத்திற்கு எதிரானதாகும். இது மாதிரியான நடவடிக்கையானது தனிச் சட்டங்கள் மூலம் முற்போக்கான, பெண்களுக்கு ஆதரவான வாய்ப்புகளை முன்னெடுப்பதற்கு முட்டுக்கட்டையாக மாறும். ஒட்டுமொத்த நாட்டையும் பாஜக வன்முறையிலும் மதவெறியிலும் தள்ளிக் கொண்டிருக்கிறது. மணிப்பூர் பற்றி எரிகிறது. அதேபோல் உத்ராண்ட்டும். இப்போது ஒரே குடியுரிமைச் சட்டத்தின் பேரால், நாட்டை கொதிநிலையிலேயே வைத்து தேர்தல் கலவரம் நடத்துகிறது பாஜக. இதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறினார். ❑

# இந்திய கல்வியைச் சிதைத்து மாணவர்களை கல்வியிலிருந்து விலக்கி வைக்கும் புதிய கல்விக் கொள்கை

(31, மார்ச் 2023 அன்று மதுரையில் நடைபெற்ற அகில இந்திய மாணவர் கழகம்–புரட்சிகர இளைஞர் கழகம் சிறப்பு மாநாட்டில் அகில இந்திய மாணவர் கழகத்தின் சமூக வலைதளப் பொறுப்பாளர் தோழர் லேகா பேசிய ஆங்கில உரையின் தமிழ் வடிவம்)

*2020 ஜூலை 20ல் நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் புதிய கல்விக் கொள்கை 2020 ஒன்றிய கல்வி அமைச்சகத் தினால் அறிவிக்கப்பட்டது. அந்தக் கொள் கையை முதலில் அமல் செய்த இந்திய மாநிலம் கர்நாடகம் ஆகும். ஜூன் 2021ல் உயர் கல்வியில் புதிய கல்விக்கொள்கையைப் புகுத்துவதாக கர்நாடகம் அறிவித்தது.*

*உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் புதிய கல்விக்கொள்கை அமலாக்கத்தில் இருக்கிறது. ஆனால், தமிழ்நாடும் கேரளமும் தங்களின் மாநிலத்தில் புதிய கல்விக் கொள்கையை அமலாக்கம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. புதிய கல்விக் கொள்கையை அமலாக்கம் செய்வதில் தனக்கு தயக்கம் இருப்பதாக மகாராஷ்டிர மாநிலமும் அறிவித் துள்ளது. மேற்கு வங்கமோ, கொள் கையை அமலாக்கம் செய்வதற்கு முன்னதாக அதனை மதிப்பீடு செய்யப் போவதாக சொல்லியிருக்கிறது.*

*இதற்கிடையில், புதிய கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தத் துவங்கிய கர்நாடகம், நான்கு ஆண்டுகள் பல்கலைக்கழக படிப்பு, தேர்வின் அடிப்படையிலான மதிப்பெண் முறை, 'நுழைவுவெளியேற்றப் புள்ளிகள்', மற்றும் புதிய கல்விக்கொள்கையின் இதர அம்சங்களை வரிசையாக, அமலாக்கம் செய்யத் துவங்கி விட்டது. இவையெல்லாம், பார்த்த உடனே கண்ணுக்குத் தென்படும் சில அம்சங்கள்தான். கண்ணுக்குத் தெரியாமல் இன்னும் பல அம்சங்கள் இருக்கின்றன. நமது கல்விமுறையின் மீது பாதகமான தாக்குதல்களைத் தொடுப் பவையாக அந்த அம்சங்கள் இருக்கின்றன. பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி முறை யிலிருந்தே விலக்கி வைக்கப்படும் அபாயம் காத்துக் கொண்டிருக்கிறது.*

*கோவிட் தாக்குதல், அதனைத் தொடர்ந்து டிஜிட்டல் முறையில் கல்வி அளிப்பது துவங்கிய பின்பு, ஓரங்கட்டப்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள், கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள் படிப்பில் இரண்டு ஆண்டு இடைவெளி விழுந்தது. இம்மாணவர்களில் பலர், கொள்ளைக் கட்டண உயர்வினால் பாதிக்கப்பட்டார்கள். இதன் காரணமாக, பள்ளியிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் விலக வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. கர்நாடக மாநில அரசு பாடப்புத்தகங்களை மறுமதிப்பீடு செய்யும் கமிட்டியை அமைத்தது. அக்கமிட்டியில் வலதுசாரி சிந்தனையாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். கல்வியை காவிமயமாக்கும் வேலையை அவர்கள் மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு அது உதவியாக அமைந்தது.*

*கோவிட்–19 நெருக்கடியின்போது, கல்வியை டிஜிட்டல் ஊடகங்கள் மூலம் அளிப்பது முழுமையான ஒன்றாக்கப்பட்டது. இதன் விளைவாக கிராமப்புரங்களின் மாணவர்கள் உட்பட, ஓரங்கட்டப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கான மாணவர்கள் இரண்டு ஆண்டு படிப்பு இடைவெளியை எதிர்கொள்ள வேண்டிவந்தது. இந்த மாணவர்களில் மிகப் பலரும் கூடுதல் கட்டணக்கொள்ளையை எதிர்கொள்ள வேண்டிவந்தது; பள்ளியிலிருந்தும் கல்லூரியிலிருந்தும் இடையிலேயே வெளியேறும் படி ஆனது.*

*அப்போதிருந்த கர்நாடக மாநில அரசு பாடப்புத்தக திருத்த கமிட்டி ஒன்றை வலதுசாரி 'அறிவாளிகள்' தலைமையில் அமைத்தது. அதன் நோக்கம் கல்வியை காவிமயமாக்கும் மாநில அரசின் வேலைத்திட்டத்தை மேலும் விரைவு படுத்துவதுதான். உயர் கல்வியில் முஸ்லீம் மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை 66 சதத்திலிருந்து 33 சதமாக வெட்டிச் சுருக்கப் பட்டது. அதேசமயம், மௌலானா ஆசாத் ஆதார ஊதிய (Fellowship) திட்டம் மத்திய அரசாங்கத்தால் திரும்பப் பெறப்பட்டது.*

*கர்நாடகத்தில் ஹிஜாப் தடை செய்யப்பட்டு,*

பல ஆயிரக்கணக்கான முஸ்லீம் பெண்கள் கல்வி நிலையங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். இது முக்கியமான பொது தேர்வு சமயத்தில் நடந்தது. விளைவாக, முஸ்லீம் பெண் மாண வர்கள் உயர் கல்வி நிலையங்களுக்குச் செல்ல முடியாமல் போய்விட்டது.

முஸ்லீம்களுக்கான இடவொதுக்கீட்டை லிங்காயத்துகள், ஒக்காலிக்கா என்ற இரண்டு ஆதிக்கமிக்க சாதிகளுக்குப் பிரித்துக் கொடுத்து விட்டு, முஸ்லிம்களை, முஸ்லீம் OBC இடவொதுக்கீட்டை பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரிவினருக்கான இடவொதுக் கீட்டினைக் கொண்டுவந்தது, முஸ்லீம் மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளைக் கடுமையாகக் குறைத்தது.

எனவே, தேசிய புதிய கல்விக் கொள் கையைக் கொண்டுவந்தது கல்வியில் கொள்கை மாற்றத்தைக் கொண்டுவருவதற்கானது என்பது ஏமாற்று வேலையாகும். மாறாக, தலித் மாணவர்கள், ஆதிவாசி மாணவர்கள், முஸ்லீம் மாணவர்களின் கல்வி உரிமையைப் பறிப்பது என்ற தங்களின் மதவெறி, சாதி வெறி அரசியலை சங்கப் படையினர் மேலும் விரிவுபடுத்துகின்றனர் என்பதே உண்மையாகும்.

புதிய கல்விக்கொள்கை அமலாக்கம் செய்யப்படும்போது, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெருந்திரளாக கொள்கை மாற்றத்தின் காரணமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மைதான். ஆனால், பிஜேபி தலைமையில் இயங்கும் மாநில அரசாங்கங்கள் திடீரென்று கொண்டுவரும், மனம்போன போக்கிலான, ஒரு பக்கச் சார்புள்ள மாற்றங்களின் காரணமாக ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினர் குறிப்பாக முஸ்லீம் மாணவர்கள் கடுமையான பாதிப்பின் தீவிரத்தை எதிர்கொள்ள வேண்டி யிருக்கிறது.

சில மாநிலங்களில் புதிய கல்விக்கொள்கை அமலாக்கம் செய்யப்படலாம். சில மாநிலங்கள் அதன் அமலாக்கத்தை எதிர்க்கலாம். எப்படி யிருந்தாலும், நாட்டிலுள்ள அனைத்து மாணவர் களையும் சில குறிப்பிட்ட அம்சங்கள் பாதிக்கும். அதனால், ஏற்படும் மாற்றங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும். அந்த அம்சங்களைப் பற்றி கட்டுரையில் விவாதிப் போம்.

## கடன் வாங்கி கல்வி பெறும் முறை

'மானியத்தின் வழியாக உயர் கல்வி பெறுவது'என்ற முறைக்குப் பதிலாக, 'கடன் பெற்று கல்வி பெறுவது'என்ற முறையைக் கொண்டுவருகிறது என்பதுதான் தற்போதைய புதிய கல்விக்கொள்கை கொண்டு வந்துள்ள மாற்றமாகும். 'உயர் கல்விக்கு நிதியளிக்கும் அதிகார அமைப்பு' (Higher Education Funding Authority -HEFA) என்ற ஒன்றை, புதிய கல்விக்கொள்கை ஒரு யோசனையாக முன்வைத் துள்ளது. அந்த புதிய அமைப்பில் கனரா வங்கியும், கல்வித்துறை அமைச்சகமும் சேர்ந்து பல்கலைக்கழகங்களுக்கு கடன் அளிக்கும். அந்த அமைப்பு அளிக்கும் கடனைப் பெற்று புதிய வகுப்பறைகள், சோதனைச்சாலைகள், மாணவர் கள் தங்கும் விடுதிகள் உள்ளிட்ட அடிக்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தப்படும்.

இப்படி மிகப் பெரிய அளவிக்கு பணம் கடன் பெற்று மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தரும் பல்கலைக்கழகம், கடனை அடைப்பதற்காக மாணவர்களிடமிருந்து மிகப்பெரிய அளவுக்கு கட்டணம் வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. இதுபோன்ற பல்கலைக் கழகங்களில் தரமான கல்வியைப் பெற வேண்டும் என்று ஒரு மாணவர் நினைப்பார் என்றால், அதற்கான மிகப்பெரிய கட்டணத் தொகையைத் தர வேண்டியிருக்கும். அப்படித் தரமுடியவில்லை என்றால், வேறு வழியின்றி கல்விக்காக வங்கிக் கடனைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை அவர் எடுத்தாக வேண்டும்.

ஆனால், படிப்பு முடிந்த பின்னர், மிக அதிக அளவுக்கு வேலையின்மை இருப்பதால், கௌரவமான சம்பளம் அளிக்கும் வேலைகள் இல்லை என்பதால், கடனை அடைப்பதற்கு மாணவர்கள் அரும்பாடு பட வேண்டியிருக்கும். எனவே, உயர் கல்விக்குள் நுழையும்போதே மாணவர்கள் கடன் வலையில் சிக்கியவர்கள் ஆகிவிடுகிறார்கள். ஆனால், கௌரவமான வாழ்க்கை அமையும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது.

2019–2020ல் நடைபெற்ற உயர் கல்வி பற்றிய அகில இந்திய சர்வேயில், இந்தியாவில் உள்ள கல்லூரிகள் 78 சதம் கல்லூரிகள் தனியாருக்குச் சொந்தமானவை என்ற தகவல் உள்ளது. அவற்றில் 68 சதம் கல்லூரிகள் அரசிடமிருந்து எவ்வித உதவியும் பெறுவதில்லை. இவ்வளவு பெரிய அளவுக்கு கல்வி தனியார்மயம் ஆகியிருக்கிறது என்பதால், மாணவர்கள் துன்பத்திற்கு ஆளாகிவருகிறார்கள். குறிப்பாக

அதிகரித்த கல்விக் கட்டணத்தால் பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

1968ஆம் ஆண்டு வெளிவந்த தேசியக் கல்விக்கொள்கை, 'கல்விக்கு ஆண்டு ஒன்றுக்கு தேசிய மொத்த உற்பத்தியில் 6 சதம் ஒதுக்கப்பட வேண்டும்', என்ற கனவை முன்வைத்தது. ஆனால், 2017-2018 ஆண்டில் கூட கல்விக்கான திட்டச் செலவு 2.7%என்ற அற்ப அளவிலேயே நின்றுகொண்டிருக்கிறது. ஜிம்பாவே, பூட்டான், கோஸ்ட்டா ரீகா, மலேசியா மற்றும் பிற நாடுகள் தங்களின் உள்நாட்டு உற்பத்தியில் ஆண்டு ஒன்றுக்கு 5 சதம் முதல் 7 சதம் வரை கல்விக்கென்று ஒதுக்குகின்றன என்பதை பொருளாதார வளர்ச்சி கூட்டுறவுக்கான அமைப்பு (OECD) மற்றும் யுனஸ்கோவின் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. ஆனால், பெரிய நாடான இந்தியா 68ல் நிர்ணயம் செய்த 6 சதம் என்ற இலக்கை தொட்டுப்பார்க்கவில்லை.

இந்தியாவின் இளைஞர்கள் எண்ணிக் கையோ அதிகரித்து வருகிறது. எனவே, கல்விக்காக இந்தியா செலவு செய்துவரும் தொகை தற்காத்திருப்பதை விட பல மடங்கு அதிக மானதாக இருக்க வேண்டும். அப்போது மட்டும் தான் தரமான, அதேசமயம் கைக்கு எட்டும் கல்வியை நாம் நமது மாணவர்களுக்கு அளிக்க முடியும்.

கல்விக்கு அரசு பணம் செலவழிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக, கொடை முயற்சிகளாகவும், தனியார் பல்கலைக் கழகங்களை தொழில் நிறுவனங்கள் அமைப்ப தாகவும் இன்றைய நிலைமை உள்ளது. (அசீம் பிரேம்ஜி, ஜிந்தால், முன்ஞ்சால், மகேந்திரா, ஷிவ் நாடார் மற்றும் பிறர் பல்கலைக் கழகங்களை அமைத்துள்ளனர்.) இது ஒருபுற மிருக்க, இந்தியாவிற்கு வருகைதந்து, அவர்களின் வளாகங்களை அமைக்கும்படி, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அழைப்பு விடுக்கப் படுகிறது.

சமீபத்தில், இந்தியாவில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் வளாகங்கள் அமைப்ப தற்காக ஒழுங்குமுறைகளை இந்திய பல்கலைக் கழக மான்ய ஆணையம் (யுஜிசி) வெளி யிட்டுள்ளது (2023). இது புதிய கல்விக் கொள்கையின் நேரடி விளைவாகும். யூஜிசி வெளியிட்டுள்ள ஒழுங்கு முறைகளின்படி, வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் வளாகங்களை இந்தியாவில் அமைத்துக்கொள்ளலாம். மாணவர் களைச் சேர்ப்பது குறித்த தங்களின் சொந்த கொள்கைகள் உருவாக்கிக்கொள்ளலாம். கட்டணம் என்ன என்பது பற்றியும், ஆசிரியர் களை பணிக்கமர்த்திக்கொள்வது பற்றியும் கூட அவர்களே தீர்மானித்துக்கொள்ளலாம். இந்தியா வில் கட்டணம் வசூலிக்கப்பட்ட பணத்தை, அவர்கள் விரும்பியது போல, தங்களின் தாய்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கவும் செய்யலாம்.

இதற்குப் பொருள் என்னவென்றால், கல்வி மிகவும் செலவு பிடிக்கும் ஒன்றாக ஆகும் என்பது மட்டுமல்ல, கல்வித் துறையில் உள்ள வேலைகளும் ஒப்பந்த வேலைகளாக மாறிவிடும்; ஆய்வுகளும் போதனைகளும் ஒருங்கிணைக்கப்படாதவையாக இருக்கும்; இவை மட்டுமல்லாமல் கல்விக்குப் பாதகமான வேறுபல அம்சங்களும் முளைவிட ஆரம்பிக்கும்.

இவ்வாறாக, இந்த இரண்டு மாடல் கல்விகளும், அதாவது, 'கடன் வாங்கி கல்வி', 'வெளிநாட்டு பல்கலைக்கழக கல்வி'என்ற இரண்டும், உயர் கல்வி என்பது உயர்ந்தோருக்கு மட்டும் என்றாக்கிவிடும்; உயர் கல்வி தனி அந்தஸ்து உள்ளவர்கள் மட்டுமே பெறக்கூடிய ஒன்றாக ஆகிவிடும். அதுமட்டுமல்லாமல், கல்வியின் தரத்தில் மிகப்பெரும் சமமற்ற நிலையைக் கொண்டுவரும். அனைவருக்கும் கிட்டக் கூடிய ஒன்றாக உயர் கல்வி இருக்காது. ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர் கல்வியிலிருந்து விளக்கி வைக்கப்படு வார்கள்.

மேற்சொன்ன இரண்டு மாடல்களுமே 'கல்வி தொழிலகங்களை'வளர்த்துச் செல்லும் நோக்கம் கொண்டவை. புதிய கல்விக்கொள்கையின் நோக்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்பவை. இந்தியாவில் நடப்பில் இருக்கின்ற 'பொதுப் பணத்தில் கல்வி'என்ற கோட்பாட்டுக்கு மரண அடி கொடுப்பவை.

### பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வு (Common University Entrance Test-CUET)

'கல்வித் தொழிலகம்'வேலை செய்வதற்காக, தேசிய சோதனை முகமை (National Testing Agency) பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வை (Common University Entrance Test - CUET) நடத்தும். இந்த முகமை, மருத்துவம், பொறியியல், அல்லது சட்டத்திற்கு மட்டும் என்றில்லாமல், அனைத்துவிதமான கல்வி, தொழில்முறை படிப்புகளுக்கும் நுழைவுத்

தேர்வுகளை நடத்தும். இளநிலை பட்டப் படிப்புகளில் சேரவும், முதுநிலை பட்டப் படிப்புகளில் சேரவும் க்யூட்(CUET) நுழைவுத் தேர்வுகளை நடத்தும். தரப்படுத்தப்பட்ட (standardised) தேர்வுகளில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில்தான் உயர் கல்விக்காக சேர்க்கை நடைபெறும் என்று புதிய கல்விக்கொள்கை ஆக்கிவிட்டது. இதன் மூலம் மனப்பாடக் கல்விதான் சாத்தியமாகுமே தவிர, ஆய்வு செய்யும் திறன் மாணவர்கள் மத்தியில் வளராது. (இந்த ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள (மத்திய பல்கலைக்கழகமான) காந்திகிராம பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கான க்யூட் தேர்வை மாணவர்கள் எழுதிவிட்டார்கள்.)

தமிழ்நாட்டில் நீட்டுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்றன. மத்திய பாடத்திட்டத்திற்கும், மாநில பாடத்திட்டத்திற்கும் இடையில் பாரபட்சம் காட்டப்படும் என்று ஒரு காரணம் சொல்லப்பட்டது. நீட் தேர்வுகள் மாநில மொழியில் நடத்தப்படுவதில்லை என்று மற்றொரு காரணம் சொல்லப்பட்டது. தமிழ்நாட்டில் மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் போதுமானவை. இதனை ஏற்க முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. மருத்துவப் படிப்புக்கு நீட் தேர்வு அவசியம் என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அதனைத் தொடர்ந்து 85 சதம் மாணவர்கள் மாநில படிப்பிலிருந்தும், 15 சதம் மாணவர்கள் சிபிஎஸ்இ படிப்பிலிருந்தும் சேர்க்கப்படுவார்கள் என்று ஒரே மனதாக ஒரு தீர்மானத்தை மாநில சட்டமன்றம் நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தையும் நீதிமன்றங்கள் செல்லுபடி யாகாது என்று அறிவித்துவிட்டன. அனிதா என்ற பெண் மாணவர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். கிராமப்புரங்களின் ஒடுக்கப்பட்ட ?பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் நீட் தேர்வு மையங்களில் படிக்க செலவழிக்க முடியாது என்றும், அதனால், அவர்களால் நீட் போன்ற தேர்வுகளில் வெற்றிபெற முடியாது என்றும் வாதிட்டார். கிராமப்புரத்தைச் சேர்ந்த அனிதா 12ஆம் வகுப்பில் சிறப்பான மதிப்பெண் பெற்றிருந்த போதிலும், அவரால் நீட்டில் வெற்றிபெற முடியவில்லை. ஆனால், அனிதா விற்கு சாதகமாக உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்க வில்லை. அவர் தற்கொலை செய்து கொண்டு இறந்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுமையும் போராட்டங்கள் நடந்தன.

நீட் போன்ற மையப்படுத்தப்பட்ட பொது நுழைவுத் தேர்வாக வந்துள்ள க்யூட், அனைத்து விதமான படிப்புகளுக்கும், அடிப்படை அறிவியல், மானுட சமூகம் கலாச்சாரம் (humanities), கலைகள், சமூக அறிவியல் உள்ளிட்ட படிப்புகளுக்கும் க்யூட் கட்டாய மாக்கப்பட்டுள்ளது.

இப்போதே, பல்கலைக்கழகங்கள் போட்டா போட்டியில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றில் சேர வேண்டும் என்றால் மிக அதிகமான கட் ஆப் மார்க் எடுத்திருக்க வேண்டும். ஒரு லட்சம் இடம் உள்ள மருத்துவப் படிப்பிற்கு 22 லட்சம் மாணவர்கள் போட்டியிடுகின்றனர். இரண்டா யிரம் மாணவர்கள் படிக்க வாய்ப்புள்ள சட்டப் படிப்பில் சேர்வதற்கு 75 ஆயிரம் மாணவர்கள் போட்டியிடுகின்றனர். இப்படி நிறைய உதாரணங்கள் சொல்லலாம்.

எனவே, இடங்கள் குறைவாக இருப்பது தான் முதன்மையான பிரச்சனை. ஆனால், அதனை ஒப்புக்கொள்ள அரசு தயாராக இல்லை. அதற்குப் பதிலாக நுழைவுத் தேர்வுகளை நுழைக்கிறது. அதன் காரணமாக, தரமான கல்வி பெறும் வாய்ப்பு மாணவர்களுக்கு மறுக்கப் படுகிறது. இப்போது பழி மாணவர்களின் மீது போடப்படுகிறது. போட்டித் தேர்வு மையங்களில் சேர்ந்து பயின்று இந்தப் போட்டித் தேர்வுகளில் அவர் வென்றாக வேண்டும் என்று சொல்லப் படுகிறது. எனவே, அனைத்து மாணவர்களுக்கும் தரமான, செலவு சிக்கனமாக கல்வியை அளிப்பது என்ற பொறுப்பினை அரசு கைகழுவி விட்டது.

விளைவாக, கண் மூடித்தனமான போட்டிப் பந்தயம் நடக்கப் போகிறது. நாடெங்கும் புதிய கோச்சிங் சென்டர்கள் உருவாகும். நீட் போல இப்போது க்யூட்டுக்கு பயிற்சி அளிக்கப் போகிறார்கள். கோச்சிங் சென்டர்களுக்குப் போகாதவர்கள் க்யூட்டில் வெற்றிபெற முடியாது. உயர் கல்வியில் சேர முடியாது. மறுபடியும் என்ன விளைவு ஏற்படும்? ஏழை, பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட, தலித், பழங்குடி மாணவர்கள் நல்ல கல்வி பெறுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள்.

வேறு முறையே கிடையாதா? இருக்கிறது. அதுபோன்ற ஒரு முறை நாடெங்கிலும் நடப்பில் இருந்தது. 12ஆம் வகுப்பு மதிப்பெண்களுடன், துறை/பாடம் தொடர்பான நுழைவுத் தேர்வு என்ற இரண்டின் மதிப்பெண்களின் அடிப் படையில் உயர் கல்வியில் நுழைவது மாணவர்களுக்கு

எளிதான ஒன்றாக இருந்து வந்துள்ளது. அதனை ஒதுக்கிவிட்டுத்தான் கோச்சிங் தேவைப்படும் தேர்வுகளை அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கை திணிக்கிறது.

**பள்ளிகள் கல்விகள் மூடல்**

மூவாயிரத்துக்கும் குறைவான மாணவர்களை உடைய அரசுக் கல்லூரிகள் மூடப்பட்டு விடலாம் என்று ஒன்றிய அரசின் புதிய கல்விக்கொள்கை சொல்கிறது. நாட்டில் கல்வி உரிமைச் சட்டம் நடப்பில் இருக்கிறது. ஆனாலும், 2018–19 மட்டும் 51 ஆயிரம் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. உத்தரப்பிரதேசத்தில் 26,000 பள்ளிகள் மூடப் பட்டன. மத்தியப்பிரதேசத்திலோ 23,000 பள்ளிகளும் ஒடிசாவில் 14,000 பள்ளிகளும் மூடப்பட்டுவிட்டன.

தேவைக்குப் பொருத்தப்பாடு உள்ளதாக் குதல், ஒன்று சேர்த்தல், அல்லது இணைத்தல் என்ற பெயர்களில் 50க்கு குறைவான மாணவர் எண்ணிக்கை உள்ள அரசுப் பள்ளிகள் மூடப்படு கின்றன. பள்ளி மூடலுக்குப் பின்னுள்ள காரணங்களில் மிகப்பெரிய காரணம் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததுதான். மொத்தமாகப் பார்த்தால் 12,54,773 ஆசிரியர் இடங்கள் அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ளன. கர்நாடகத்தில் மட்டும் 1,41,358 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இதுதான் இந்தியாவில் அதிகபட்ச எண்ணிக்கையாகும். இவற்றின் காரணமாக, மேலும் நல்ல பள்ளிகள் இல்லை என்ற காரணத் தாலும் 9,30,531 பள்ளியிலிருந்து விலகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பள்ளி ஆசிரியர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டு விட்டபோதும் கூட, தேர்தல் போன்ற பிற பணிகள் அவர்களின் தலையில் சுமத்தப்படுகின்றன. விளைவாக, அவர்கள் பள்ளிக்கூட அறையிலிருந்து விலகியிருக்கும் நிலை ஏற்படுகிறது. பிள்ளைகளின் கல்வி சீர் கெடும் நிலை ஏற்படுகிறது. அரசுப் பள்ளிகளை நம்ப முடியவில்லை என்பதால், பெற்றோர்கள் தனியார் நிறுவனங்களில் பிள்ளைகளைச் சேர்க்கின்றனர். இதன் விளைவு என்றால், கிராமப்புர மாணவர்கள், ஒடுக்கப்பட்ட சமூக மக்கள், பெண் பிள்ளைகள், சிறப்புத் திறன் உள்ள பிள்ளைகள், வேண்டுமென்றே தற்போதைய கல்வி முறையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள்.

**நிறைவாக..**

இந்திய கல்வி முறையின் நெஞ்சில் பாய்ச்சப்பட்ட மரணக் கத்தியாக தேசிய புதிய கல்விக்கொள்கை இருக்கிறது. மாணவர்கள் நல்ல கல்வியிலிருந்து விலக்கிவைக்கப்படுவார், ஒழித்துக்கட்டப்படுவார்கள். கல்விமுறையில் உள்ள சமூக நீதியை ஒழித்துக்கட்டுவதற்கென்று தேசிய புதிய கல்வி திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது. கிராமப்புர மாணவர்களுக்கும், ஒடுக்கப்பட்ட பிரிவுகளின் மாணவர்களுக்கும் கல்வி கிடைக்காமல் போவதற்கு திட்டமிடப் பட்ட கட்டமைப்பு மாற்றங்களைக் கொண்டு வருவது மட்டுமல்லாமல், கல்வி உதவித் தொகை களை ஒழிப்பது, இடவொதுக்கீட்டை மறுப்பது போன்றவற்றையும் செய்து வருகிறது. தேசியக் கல்விக்கொள்கை ஆவணத்தின் ஒரே ஒரு இடத்தில் கூட, 'இடவொதுக்கீடு'என்ற வார்த்தை வரவில்லை என்பதே ஆவணத்தின் உண்மையான நிறம் என்னவென்பதைக் காட்டுகிறது.

தேசத்தின் மதிப்பு வாய்ந்த உயர் கல்வி நிறுவனங்களில் நிலவும் சாதி பாரபட்சம் காரண மாகவும், கொடுமைகளின் காரணமாகவும் சமீபத்தில் ரோகித் வெமுலா, பாயல் தட்வி, தர்ஷன்சோலன்கி உள்ளிட்ட நூற்றுக் கணக்கான மாணவர்களை நாம் பறிகொடுத்தோம்.

சமூக வன்மங்களை எதிர்கொண்டு, சமத்துவமான, மலிவான, தரமான கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்கு மாறாக, சமூகப் பிளவுகளை மேலும் பெரிதாக்கி, காவிமயம், கார்ப்பரேட்மயம், தனியார்மயம் என்ற திட்டத்தின் மூலம், பணக்காரர்களுக்கும் மேற்குடி மக்களுக்கு மட்டுமே கல்வி என்றாக் குவதையே புதிய தேசிய கல்விக்கொள்கை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

தலித், பழங்குடிகள், முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கான கல்வியின் மீது, பிஜேபி அரசு அனைத்துத் தாக்குதல்களையும் கட்ட விழ்த்துவிட்டுள்ளது. அதுமட்டுமல்ல, பிஜேபி யின் இலக்காக பெண் மாணவர்களும், சிறப்புத் திறன் உள்ள மாணவர்களும் உள்ளனர். இதுபோன்ற தாக்குதலை எதிர்த்து நிற்பதற்கு விவசாயிகளின் போராட்டத்திலிருந்தும், தொழிலாளர் விரோத சட்டங்களை எதிர்த்து நிற்கும் தொழிலாளர்களிடமிருந்தும், குடியுரிமை பறிப்பு சட்டங்களுக்கு எதிராக நடந்த போராட்டங்களிலிருந்தும் நாம் உத்வேகம் பெற வேண்டும்.

புதிய கல்விக்கொள்கைக்கு எதிரான, கல்வி முறையின் மீது சங் பரிவார் தொடுத்துள்ள தாக்குதலுக்கு எதிரான வலுவான மாணவர் இயக்கத்தை நாம் கட்டமைத்தாக வேண்டும்.

**தமிழாக்கம் – சி.மதிவாணன்**

# மோடி-ஜோ பைடன் ஜோடி ரகசியம்

**ரமேஷ் கணபதி**




*ஒரு 12 வயதுடைய சிறுமியை சிலர் நடுரோட்டில் அடித்து உதைத்து சித்தரவதை செய்து கடைசியில் அவர் கண்ணைக் கட்டி, பின்னால் இருந்து சுட்டுக் கொல்லும் வீடியோ ஒன்று சமூக வலைத் தளத்தில் காணப்படுகிறது. அது காண்போரை குலைநடுங்கச் செய்கிறது. அந்த வீடியோ மணிப்பூரில் எடுக்கப்பட்ட தாகவும் அந்த சிறுமி மணிப்பூரில் நடக்கும் அராஜகச் செயல்களை, வன்முறையை பிரதமர் மோடி அவர்கள் அமைதி காக்காமல் உடனடியாகத் தலையிட்டு மணிப்பூரில் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்று சில நாட்களுக்கு முன்னர் அற வழியில் கைப்பட எழுதப்பட்ட பதாகையைப் பிடித்துக் கொண்டிருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக, அவர் சங்கிகளால் அவ்வாறு அடித்துக் கொடூரமாகக் கொல்லப்படுகிறார் என்று அந்த வீடியோ பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அது உண்மையானால் இந்தியா மிகப் பெரிய ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதைத் தான் காட்டுகிறது. அந்த வீடியோ விற்குள் காட்டப்படும் உள் படத்தில் சிறுமி பிடித்துக் கொண்டிருக்கும் தாளில், அன்பான திரு.மோடி அவர்களே, மணிப்பூர் எரிந்து கொண்டிருக்கிறது, இதுவரை 100ற்கும் மேற்பட்ட வர்கள் இறந்து விட்டனர், 10,000த்திற்கும் மேற்பட்ட வீடுகள் எரித்து தரைமட்டம் ஆக்கப் பட்டு விட்டன. 75,000த்திற்கும் மேற்பட்டவர்கள் வீடற்றவர் களாகிவிட்டனர். 40 நாட்களுக்கும் மேலாக இன்டர்நெட் இணைப்பு இல்லை, நீங்கள் ஏன் அமைதியாக இருக்கிறீர்கள்? என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.*

*அந்தச் சிறுமியைக் கொல்வது அவர் நாட்டின் பிரதமர் மோடியை விமர்சனம் செய்தார் என்பதற்காகக் கூட இல்லாமல் இருக்கலாம். அல்லது மணிப்பூரில் அல்லாமல் வேறு எங்காவது கூட இருக்கலாம். வேறு எதற்காகவும் கூட இருக்கலாம். எதுவாக இருந்தாலும் ஒரு சிறுமியை அடித்து சித்தரவதை செய்து இப்படிக் கொல்வது கொடூரமானது, நாடும் நாமும் இந்த உலகமும் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.*

*இந்த நிலையில், பிரதமர் மோடி அவர்கள் அமெரிக்கா விற்கு சுற்றுப் பயணம் சென்று வந்தார். 2002ல் மோடி குஜராத் முதல்வராக இருந்தபோது இஸ்லாமியர்கள் இன அழிப்பிற் குள்ளாக்கப்பட்டனர். கர்ப்பிணியான பில்கிஸ் பானு சித்தரவதை செய்யப்பட்டு பாலியல் வன்புணர்வுக்குள் ளாக்கப்பட்டார். அவருடைய அவர் கண் முன்னேயே அவரது மூன்று வயதுக் குழந்தையை பாறையின் மீது மோதி அடித்துக் கொன்றார்கள். அவரின் உறவினர்கள் அடித்துக் கொல்லப் பட்டார்கள். அந்த இன அழிப்பின் போது, அப்போது பிரதமராக இருந்த திரு.வாஜ்பாய் அவர்கள் நான் எந்த முகத்தை வைத்துக் கொண்டு வெளிநாட்டுக்குச் செல்வேன் என்று*

வருத்தப்பட்டார். மோடி அமெரிக்காவிற்குள் வர தடைகூட போட்டார்கள்.

இப்போது மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. 200க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கானவர்கள் சொந்த நாட்டில் அகதிகளாக வீடிலிழந்து வீதியில் திக்கற்றுத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். குஜராத்தில் இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டது போலவே மணிப்பூரில் கிறிஸ்தவர்கள் கொல்லப்படுகிறார்கள். அமெரிக்காவிற்கு செல்லும் மோடி அவர்களுக்கு இந்தியாவிற்குள் உள்ள மணிப்பூருச் செல்ல நேரம் இல்லை. மனம் இல்லை. மணிப்பூரில் நடப்பவற்றை உலகமே பார்த்துக் கொண்டிருக்கிறது. பல நாடுகளும் மணிப்பூரின் நிலைக்காக இந்திய அரசுக்கு கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், மோடியின் பெயர் உலக அரங்கில் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் தன்னுடைய அவப்புகழைத் தடுத்து நிறுத்தவும், 2024ல் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலைக் கணக்கில் கொண்டும் மோடி தன்னுடைய ஆட்சி காலத்தில் ஆறாவது முறையாக அமெரிக்காவிற்கு அரசுமுறை சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

அமெரிக்காவிற்குள் வர வேண்டாம் என்று அன்று சொல்லப்பட்ட மோடி, இன்று சிவப்புக் கம்பளம் விரித்து அமெரிக்க அதிபர் பைடனால் வரவேற்கப்படுகிறார். இதை பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் பாஜக–சங்கிகளும் மோடியின் ஊடகங்களும். அமெரிக்காவின் பைடன் அரசாங்கம் ஒரு பக்கம் மோடிக்கு வரவேற்பு கொடுத்து கொண்டிருந்த அதேவேளை அதற்கு நிகராக அந்த நாட்டில் வசிக்கும் அமெரிக்கர்கள், இந்தியர்கள், இந்திய வம்சாவழியினர், மோடிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். மோடியின் இந்தியாவில் ஜனநாயகம் இல்லை, சிறுபான்மை மக்கள் அச்சத்தில் வாழ்கிறார்கள், ஊடகச் சுதந்திரம் கிடையவே கிடையாது என்று சொல்லி பலர் மோடியின் கூட்டத்தைப் புறக்கணித் தார்கள். அமெரிக்காவின் தெருக்களில் மோடிக்கு எதிராக ஆங்காங்கே எதிர்ப்புக் கூட்டங்கள் நடந்தன. அமெரிக்காவின் சட்ட வல்லுநர்கள் 75 பேர் மோடியின் அமெரிக்கா வருகைக்கு எதிராக தங்கள் கவலையைத் தெரிவித்து அமெரிக்க அதிபர் பைடனுக்கு கடிதம் எழுதினார்கள்.

மோடிக்கு நெருங்கிய நண்பர் என்று கூறப்பட்ட அமெரிக்கா முன்னாள் அதிபர் பாரக் ஒபாமா, சிஎன்என் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில், பெரும்பான்மை இந்துக்கள் வாழும் இந்தியாவில், சிறுபான்மை மக்கள், இஸ்லாமியர்கள் பாதுகாப்பு பற்றி, பைடன் மோடியிடம் பேச வேண்டும் என்று கூறினார். மேலும், ‘பிரதமர் மோடியைச் சந்திக்க எனக்கு வாய்ப்பு கிடைத்திருந்தால், நீங்கள் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவில்லையெனில், இந்தியா குறிப்பிட்ட கட்டத்தில் பிரிந்து போவதற்கான சூழல் உள்ளது, அது இந்தியாவின் நலனுக்கு முற்றிலும் எதிரானதாக மாறும் என்று கூறியிருப்பேன் என்றும் குறிப்பிட்டார். பாஜக–சங் பரிவார் கும்பல்களுக்கு கோபம் வந்து பாரக் ஒபாமாவை ‘ஹுசைன் ஒபாமா’ என்றும் முஸ்லிம் என்றும் இந்தியாவிற்கு எதிரானவர் என்றும் கூச்சல் போட ஆரம்பித்துவிட்டார்கள்.

மோடி அரசு பற்றிய ஒபாமாவின் இந்த விமர்சனத்திற்கு, மோடியாலும் அவரது கூட்டாளிகளாலும் சரியான பதிலைச் சொல்ல முடியவில்லை. நிர்மலா சீதாராமன், ஒபாமாவும் சிரியா, ஏமன் என முஸ்லீம் நாடுகள் மீது போர் தொடுத்தவர்தானே என்று கூறி, தங்கள் அரசு இஸ்லாமியர்கள் மீது தாக்குதல்கள் நடத்துகிறது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். அமைச்சர் ராஜ்நாத் சிங் என்ன பேசுவது என்று தெரியாமல் ஒபாமாவைக் குறை கூறினார். இதில் கொடுமை என்னவென்றால், ஒபாமா காலத்தில் இருந்து ஜோ பைடன் காலம் வரை, இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராகப் போர் நடத்தி வரும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையைத்தான் மோடி அரசு தொடர்ந்து ஆதரித்துக் கொண்டு வருகிறது என்பதைக்கூட அமைச்சர்கள் இருவரும் அடியோடு மறந்து விட்டார்கள்.

தன்னுடைய ஒன்பது ஆண்டு கால ஆட்சியில், இதுவரை இந்தியாவில் ஒரு முறை கூட பத்திரிகையாளர்களைச் சந்திக்காத மோடிக்கு, அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் அதிபர் ஜோ பைடனுடன் சேர்ந்து பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. அந்த பத்திரிகையாளர் சந்திப்பில், இந்தியாவில் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்படுவது பற்றி வால்ஸ்ரீட் ஜர்னல் பத்திரிகையாளர் சப்ரினா சித்திக் கேள்வி எழுப்பினார். இந்தியாவில் இஸ்லாமியர்கள், சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க உங்கள் அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன என்று கேட்டார். அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும்

முன் பலமுறை தண்ணீர் குடித்த மோடி அவர்கள், எமது நாடி நரம்புகளில் எப்போதும் ஜனநாயகம் ஓடிக் கொண்டிருக்கிறது, எங்கள் நாட்டில் எந்தவித பாகுபாட்டிற்கும் துளிகூட இடமில்லை என்று பதிலளித்து முழுப் பூசனிக்காயை சோத்தில் மறைக்க முயற்சித்தார்.

உடனே ஆர்எஸ்எஸ் சங்கிகளுக்கு கோவம் வந்து வால்ஸ்ட்ரீட் பத்திரிகையாளர் சப்ரினா சித்திக், மோடியிடம் எப்படி இவ்வாறு கேள்வி கேட்கலாம் அவர் ஒரு பாகிஸ்தான் கைக்கூலி என்று வழக்கம்போல் ஆபாசமாக பிரச்சாரம் செய்து விஷமத்தை கக்கினார்கள். சங்கிகளின் இந்த அராஜகச் செயல் அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கே பொறுக்கவில்லை. அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் சார்பாக ஆர்எஸ்எஸ் சங்கிகளுக்கு கண்டனம் தெரிவிக்கப் பட்டது.

நியூயார்க் டைம்ஸ் நாளேடு, மோடியின் வருகைக்குக் கண்டனம் தெரிவித்து தலையங் கமே எழுதியிருந்தது. 'மோடி அரசும் வலதுசாரி பாஜகவும் இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள குடிமை மற்றும் அரசியல் உரிமைகளை, சுதந்திரத்தை, ஜனநாயகத்தை அரித்துப் போகச் செய்து கொண்டிருக்கின்றன. மோடியும் அவரது கூட்டாளிகளும் மதச் சிறுபான்மை மக்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். தங்களின் அரசியல் எதிரிகளைத் தண்டிக்கவும் விமர்சனக் குரல்களை நசுக்கவும் தங்களுடைய ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள். மக்கள் செல்வாக்கு உள்ள தலைவர்களின் எதிர்ப்புக் குரல்களைத் தடுக்க கருப்புச் சட்டங்களைப் பயன்படுத்தினால் ஜனநாயகம் என்பது புதைகுழிக்குள் தள்ளப்படும்' என எச்சரித்துள்ளது.

இக் கடும் எதிர்ப்புகளுக்கிடையே மோடி, அமெரிக்காவிற்குச் சென்றார் என்றால், அதற்குப் பின்னே, மோடியின் தேர்தல் நலனும் அமெரிக்கா வின் ஆக்கிரமிப்பு நலனும் அடங்கியிருக்கின்றன. ஜோ பைடனும் மோடியும் சேர்ந்து 58 பக்க கூட்டறிக்கை வெளியிட்டார்கள். அது பிரபஞ்சத் தின் எந்தப் பிரச்சனையையும் விட்டு வைக்கவில்லை. ஆனால், இந்தியாவில் அமெரிக் காவின் கை ஓங்குவதற்கும் இரண்டு நாடுகளுக் கிடையிலான ராணுவ ஒத்துழைப்பை ஆழப் படுத்தி அமெரிக்காவின் ராணுவத் தளவாட வியாபாரத்தைப் பெருக்குவதும் அதன் மூலம் அதானி–அம்பானிகளை வளமாக்குவதும்தான் மோடி பயணத்தின் பிரதான நோக்கமாகும்.

அமெரிக்காவிடமிருந்து 31 வேவு பார்க்கும் டிரோன்களை 3.1 பில்லியன் டாலர் கொடுத்து அதிக விலைக்கு வாங்குகிறது மோடி அரசு. ரபேல் ஊழல்போல் அடுத்து டிரோன் ஊழல். உற்பத்தித் துறையில் இந்துஸ்தான் ஏரோனாட் டிக்கல் நிறுவனமும் அமெரிக்க ஜெனரல் எலக்ரிக்கல் நிறுவனமும் எப்414 என்ஜின்கள் உற்பத்தி செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட உள்ளது. அதேபோல் குஜராத்தில், மின் கடத்தி சாதனங்கள் தயாரிப்பு மற்றும் பரிசோதனை நிறுவனம் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இவற்றுக்கான பெரும்பான்மை முதலீடு இந்தியாவால் செய்யப்பட உள்ளது. அமெரிக்க தொழில் நுட்பத்தை இந்தியா பயன்படுத்திக் கொள்ளப் போகிறதாம்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பானுடன் இந்தியாவும் ஏற்கனவே, குவாட் ராணுவக் கூட்டணியில் சேர்ந்துவிட்டது. அமெரிக்கா, ஆசியாவில் தனக்குப் போட்டியாக எல்லா விதத்திலும் முன்னேறியுள்ள சீனாவைச் சுற்றி வளைத்துக் கட்டுபடுத்திட இஸ்ரேல்–அமெரிக்க கூட்டணியில் இந்தியாவையும் அரபு எமிரேட் யும் சேர்த்துக் கொண்டுள்ளது. ஐ2யு2 (இந்தியா, இஸ்ரேல், யுஎஸ்ஏ, யுஏஇ–India, Israel, USA, UAE). இந்தியாவில் அமெரிக்காவுடனான கூட்டு ராணுவப் பயிற்சி, கடற்படை பயிற்சி போன் றவை நடத்தப்பட்டு வருகின்றன. மோடி அரசு சீனாவை எதிர்க்க அமெரிக்காவுடன் கூட்டு சேர்கிறது. தன்னுடைய 'அகண்ட பாரத' ஆர்எஸ்எஸ் கனவுக்காக, பக்கத்து நாடுகளுடன் பகையை வளர்க்கிறது. புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் நேபாளையும் உள்ளடக்கிய அகண்ட பாரத வரைபடத்தை வரைந்து வைத்துள்ளது.

அமெரிக்காவை மய்யப்படுத்திய இந்திய வெளியுறவுக் கொள்கை, தொழில்நுட்பம், ராணுவப் பயிற்சி எல்லாம் இந்தியாவுக்குச் சாதகமா? அமெரிக்காவுக்குச் சாதகமா? என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மக்கள் நலனைக் காட்டிலும் கார்ப்பரேட்டுகள் நலனே பைடனுக்கும் மோடிக்கும் முதன்மையானது. குஜராத்தில் இஸ்லாமியர்கள் இனவழிப்புக்குள் ளாக்கப்பட்டபோது, மோடிக்கு தடை விதித்த, அமெரிக்கா இப்போது மணிப்பூரில் கிறிஸ்த வர்கள் இனவழிப்புக்குள்ளாகும் போது, மோடிக்கு இதுவரை இல்லாத வரவேற்பு கொடுக்கிறது என்றால், இருவரின் நோக்கமும் மக்கள் நலன் அல்ல என்பதுதானே! ❑

# புதுவை மாநில ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்க கோரிக்கை–அமைப்பு மாநாடு




*ஏஐசிசிடியு அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளத்தின் 4வது அகில இந்திய மாநாடு கன்னியாகுமரில் 2023 ஜுலை 8–9 தேதிகளில் நடைபெற உள்ளது. ஜுலை 7ம் தேதி கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ்நாடு ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் 4வது தமிழ்நாடு மாநில மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் ஏஐசிசிடியு அகில இந்தியத் தலைவர் தோழர் வீ.சங்கர், அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் டிம்ரி, அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் சோ.பாலசுப்பிரமணியன், இகக(மாலெ) பீகார் சட்டமன்ற உறுப்பினர் தோழர் வீரேந்திர குப்தா, இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.*

*அதன் ஒரு பகுதியாக புதுவை மாநில ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் 23வது கோரிக்கை–அமைப்பு பொது மாநாடு 2023 ஜுலை 2 அன்று கரிக்கலாம்பாக்கத்தில் நடைபெற்றது. மாநாட்டில் அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் சோ.பாலசுப்பிரமணியன், ஏஐசிசிடியு தமிழ்நாடு மாநில சிறப்புத் தலைவர் தோழர் சொ.இரணியப்பன் சிறப்புரையாற்றினார்கள். புதுவை மாநில அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தலைவர் தோழர் விஜயா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.* ❑



## வீட்டு மனைப் பட்டா கேட்டு போராட்டம்



வீட்டுமனைப் பட்டா கேட்டு சேலம் மாவட்டம் வாழப்பாடி வட்டம் குறிச்சி ஊராட்சி சிபிஐஎம்எல் கட்சி உள்ளூர் கமிட்டி சார்பில், வீட்டுமனை பட்டா கேட்டு ஜூன் 19 அன்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. உண்ணா விரதப் போராட்டத்தில் தோழர் மோகனசுந்தரம் உள்ளிட்ட பல தலை வர்கள் உரையாற்றினர்.

## ஜனநாயக கட்டுமானத் தொழிலாளர் சங்க ஒன்றிய மாநாடு

தமிழ்நாடு ஜனநாயக கட்டுமானத் தொழிலாளர் சங்கத்தின் ஆண்டிப் பட்டி ஒன்றிய மாநாடு மணிய காரன்பட்டியில் 25.5.2023 அன்று நடைபெற்றது. மாநாட்டில் கட்டு மான தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் சொ. இரணி யப்பன், ஏஐகேஎம் மாநிலத் தலைவர் தோழர் அ.சிம்சன், இகக(மாலெ) தேனி மாவட்டச் செயலாளர் தோழர் எஸ்.கோபால் உள்ளிட்ட பல தலைவர் கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.



## கட்டுமானத் தொழிலாளர் சம்மேளன மாநாடு பிரச்சாரம்



வள்ளியூர்



திண்டுக்கல்

## அனைத்து தொழிற்சங்கங்கள் மாநாடு



கோவை

ஏஐசிசிடியு மாநிலத் துணைத்தலைவர் கே.பாலசுப்பிரமணியன் உரையாற்றினார்




சேலம்

ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் வேல்முருகன் உரையாற்றினார்

## தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்க நிர்வாகிகள் மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சருடன் சந்திப்பு



*அகில இந்திய தொழிற்சங்க மையக் கவுன்சி(AICCTU)லுடன் இணைக்கப்பட்ட தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்கம் (TNTSA) சார்பில் இன்று (28.6.2023) மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் திரு.முத்துசாமி அவர்களின் அழைப்பினை ஏற்று அமைச்சரின் இல்லத்தில் ஏஐசிசிடியு தமிழ்நாடு மாநில சிறப்புத் தலைவர் சொ.இரணியப்பன், டாஸ்மாக் சங்க மாநில தலைவர் ஜி.சிவா, மாநிலப் பொதுச் செயலாளர் சந்திரகுமார், மாநிலத் துணைத் தலைவர் ஆர். பொன்னுதுரை உட்பட நிர்வாகிகள் அமைச்சரை சந்தித்துப் பேசினர். அப்போது 20 ஆண்டுகளாகப் பணிபுரியும் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக பணிநிரந்தரம் செய்ய வேண்டும், அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட வேண்டும், எம்ஆர்பியை அமுல்படுத்தினால் அதனால் ஏற்படும் பிரச்சனைகளை அரசு களைய வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைச்சர் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வுகாணப்படும் என்று தெரிவித்தார்.* ❑

## தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்க துணைத் தலைவரை தற்காலிகப் பணிநீக்கம் செய்தததைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

*ஏஐசிசிடியு மாநிலக்குழு உறுப்பினரும் தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவருமான தோழர் ஆர்.பொன்னுதுரை, தமிழ்நாடு அரசு திருமண மண்டபங்களில் மது விருந்து நடத்த அனுமதி வழங்கியதை விமர்சித்தார் என்பதற்காக அவரை டாஸ்மாக் நிர்வாகம் தற்காலிகப் பணி நீக்கம் செய்தது. அதைக் கண்டித்து திண்டுக்கல்லில் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. அந்த ஆர்ப்பாட்டத்தில் ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் சொ.இரணியப்பன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.* ❑




## ஏஐசிசிடியு தொடர் முயற்சியால் தென்காசி தூய்மைப் பணியாளர்களுக்கு நல வாரிய அட்டை கிடைக்கப்பெற்றது

*ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட தூய்மைப் பணியாளர், காவலர்கள் சங்கத்தின் தொடர் முயற்சி மற்றும் போராட்டத்தினால் செங்கோட்டை நகராட்சி ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களுக்கு தூய்மை பணி தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் அட்டை செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் பார்க்கவி அவர்களால் வழங்கப்பட்டது. ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட ஜனநாயக தூய்மை பணி தொழிலாளர்கள் காவலர்கள் சங்க மாவட்டத் தலைவர் எம்.வேல்முருகன் ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட பொருளாளர் எஸ். குருசாமி தூய்மை பணியாளர் சங்க தென்காசி மாவட்ட செயலாளர் ஜே சுப்பிரமணியன் உட்பட பணியாளர்கள் பங்கேற்றனர்.* ❑



# மோடி ஆட்சியை வெளியேறிடக் கோரி அனைத்திந்திய விவசாய கிராமப்புறத் தொழிலாளர் சங்கத்தின் பிரச்சார இயக்கம் – ஆர்ப்பாட்டம்

மோடி ஆட்சியை வெளியேற்றுவோம்! தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை பாதுகாப்போம்!! தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 200 நாள் வேலை, நாளொன்றுக்கு ரூ.600/ சம்பளம் வழங்கு!!! கிராமப்புற ஏழைகளுக்கு மாதம் ரூ.5000 ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்திந்திய விவசாய கிராமப்புறத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக மாநில தழுவிய அளவில் ஜுன் 15 முதல் ஜுன் 30 வரை பிரசார இயக்கம், கையெழுத்து இயக்கம், ஆர்ப்பாட்டங்கள் மாவட்டங்களில் ஒன்றிய மட்டங்களில் நடத்தப்பட்டன. இந்த பிரச்சார இயக்கத்தில் விவசாய, கிராமப்புறத் தொழிலாளர்கள் பல்வேறு பகுதிகளிலும் உற்சாகமாகக் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். மோடி அரசுக்கு எதிரான தங்கள் குமுறல்களை கோபத்தை வெளிப்படுத்தினர். ஜுன் 30 அன்று மாவட்டத் தலைநகரங்களில் பேரணி, ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. கிராமப்புறத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்கள், பேரணி களில் திரளாகக் கலந்து கொண்டனர்.

இந்த பிரச்சார, போராட்ட நிகழ்ச்சிகளில் அனைத்திந்திய விவசாய, கிராமப்புறத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் பாலசுந்தரம், மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் குணசேகரன், மாநிலத் துணைத் தலைவர் தோழர் வீ.மு.வளத்தான், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளர் தோழர் ரேவதி, இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைத்தம்பி, அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் மாநிலத் தலைவர் தோழர் சிம்சன் புதுக்கோட்டை ஏஐகேஎம் மாவட்டச் செயலாளர் விஜயன், மதுரை சண்முகம், கடலூர் தனவேல், விருதாச்சலம் ராஜசங்கர், திருநாவலூர் கலியமூர்த்தி உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.










MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.07.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# அனைத்திந்திய விவசாய, கிராமப்புறத் தொழிலாளர் சங்க பிரச்சார இயக்கம் 2023 ஜுன் 15–30


















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh